# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 மாசி 27 ஞாயிற்றுக்கிழமை (11-03-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:105


# பேச்சுக்கான ஏற்பாடுகளை ஆராய

# பீரிஸ் அடுத்த வாரம் நோர்வேக்கு!

## சொல்ஹெய்மைச் சந்தித்து முக்கிய முடிவுகளை எடுப்பார்

கொழும்பு,மார்ச்11

**அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே சித்திரைப் புத்தாண்டுடன் ஆரம்பமாகலாம் என்று எதிர்பார்க்கப்படும் நேரடிப் பேச்சுக்கான பூர்வாங்க ஏற்பாடுகள் குறித்து ஆராய்வதற்காக அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் அடுத்த வாரம் நோர்வே செல்லவுள்ளார்.**

முதற் கட்டப் பேச்சில் அரச தரப்புப் பிரதிநிதியாகப் பங்குபற்றுவார் என்று கூறப்படும் அரசமைப்பு விவகார, கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் அடுத்த வாரம் நோர்வே சென்று பேச்சுக்கான முன்னேற்பாடுகளைக் கவனிப்பார் என கொழும்புச் செய்தி வட்டாரங்கள் நேற்றுத்

(14ஆம் பக்கம் பார்க்க)

## சத்தியாக்கிரகத்தில் தமிழ்க்கட்சிப் பிரதிநிதிகள்

கொழும்பு,மார்ச்11

ஹட்டனில் மலையகத் தோட்டத் தொழிலாளர்களால் நடத்தப்பட்டு வரும் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் பத்துத் தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்புப் பிரதிநிதிகள் நேற்றுக் கலந்து கொண்டனர்.

மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் நியாயமான சம்பள உயர்வுக் கோரிக்கைக்கு முழுமையான ஆதரவைத் தெரிவித்ததுடன் சம்பந்தப்பட்டவர்கள் இந்தக் கோரிக்கைக்கு செவிமடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளவதாக தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் அங்கு தெரிவித்தனர். (ஐ-6)

### நாளை ஆசிரியர் எழுச்சி மாநாடு

## மாணவர்கள் வீடுகளில் தங்கி ஆதரவு தரக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச்.11

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் எழுச்சி மாநாடு நாளை திங்கட்கிழமை யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சகல பாடசாலை மாணவர்களையும் நாளை பாடசாலை செல்லாது வீடுகளில் தங்கி இருந்து மாநாடு சிறப்பாக நடைபெற ஒத்துழைப்பு வழங்குமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

எழுச்சி மாநாடு தொடர்பாக வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நேற்று மாலை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் மாணவர் சமூகத்துக்கு இந்த வேண்டுகோளை விடுத்தார்.

நாளைய மாநாட்டில் ஆசிரியர்கள் அனைவரும் பங்குபற்றுவதற்கு வசதியாகவே மாணவர்களை வீடு

(14ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் செய்தியுடன் மடுவுக்கு சர்வமதக் குழு செல்லும்

கொழும்பு,மார்ச்.11

அரசின் நல்லெண்ணச் செய்தியுடன் சர்வமதக் குழு இம்மாத இறுதியில் மீண்டும் மடுவுக்குச் செல்லவிருக்கின்றது.

கடந்த 19ஆம் திகதி மடுவுக்குச சென்ற சர்வமதக் குழு விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்த சமயம் அவர்களிடம் சில கோரிக்கைகளை விடுத்திருந்தது. அரசுடன் பேச்சுக்கள் நடத்த உண்மையில் விருப்பமிருப்பின் நல்லெண்ண சமிக்ஞையாக தடுத்து வைத்துள்ள சிங்களப் பொதுமக்களை விடுவிக்க வேண்டும் என்று புலிகளிடம் அக்குழு கோரிக்கை விடுத்திருந்தது.

அந்தக் கோரிக்கையை ஏற்றுக் கடந்த வாரம் இரு மீனவர்களை விடுதலைப் புலிகள் விடுவித்து சர்வ மதக் குழுவின் தலைவரிடம் ஒப்படைத்திருந்தனர். அடுத்து வரும் நாள்களில் மேலும் சிலரை விடுவிக்க விரும்பதாக விடுதலைப் புலிகள் சர்வமதக் குழுவுக்கு அறிவித்துள்ளனர். இந்த நல்லெண்ண சமிக்ஞையைப் பயன்படுத்தி சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கும் விருப்பத்தைத் தெரிவிக்கும் அரசின் செய்தியைத் தாம் இம்மாத விஜயத்தின்போது எடுத்துச்செல்ல இருப்பதாக சர்வமதக் குழுவின் தலைவர் விமல சாகரதேரர் தெரிவித்துள்ளார். (ஐ-3)

## புலிகளுக்கு அழுத்தம் கொடுக்க ஜனாதிபதி ஐரோப்பா விஜயம்

கொழும்பு,மார்ச்11

ஐரோப்பிய நாடுகளுக்கான மூன்று வார கால விஜயத்தை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாளை ஆரம்பிக்கவுள்ளார். முதலில் அவர் ஜேர்மனிக்குச் செல்கிறார்.

சமாதான முயற்சிகளுக்கு சர்வதேச ஆதரவைத் திரட்டுவதும், பொருளாதார உதவிகளைப் பெற்றுக் கொள்வதுமே ஜனாதிபதியின் இந்த விஜயத்தின் நோக்கம் என்று தெரிவிக்கப்படுகிறது. ஜேர்மனியில் பேச்சுக்களை நடத்திய பின்னர் நோர்வே, நெதர்லாந்து ஆகிய நாடுகளுக்குச் செல்லும் ஜனாதிபதி விடுதலைப் புலிகளுடன் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள நேரடிப் பேச்சுக்கள் குறித்தும் அந்நாட்டுத் தலைவர்களுடன் கலந்துரையாடவுள்ளார்.

அதைத் தொடர்ந்து லண்டன்

(14ஆம் பக்கம் பார்க்க)

### மகாசங்க சபா தேரர் ஆயர்களிடம் தெரிவிப்பு:

## தமிழர்களின் தாயகக் கோட்பாட்டை சிங்களவர்கள் ஏற்கப்போவதில்லை!

### பேச்சு முயற்சியை எதிர்க்க அதுவே காரணமாம்

யாழ்ப்பாணம்,மார்ச்11

தமிழ் மக்களின் தாயகக் கோட்பாடு என்ற கோரிக்கையை சிங்கள மக்கள் ஒருபோதும் ஏற்கப்போவதில்லை. சமாதான முயற்சிகளுக்கு எதிர்ப்பு கிளம்பியுள்ளதற்கு இந்தக் கோரிக்கையே காரணமாகும்.

இப்படிக் கூறியுள்ளார் ஜாதிக மகா சங்க சபாவின் முக்கிய பிரமுகரான மடுலுவாவ சோபித தேரர்.

தம்மைச் சந்தித்த யாழ்.ஆயர் அதிவண.தோமஸ் சவுந்தரநாயகம், மன்னார் ஆயர் அதிவண. இராயப்பு ஜோசப் ஆகியோரிடமே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சமாதான முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வரும் தென்னிலங்கையைச் சேர்ந்த கடும் போக்கு அமைப்புக்களின் பிரதிநிதிகளை ஆயர்கள் சந்தித்து சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு வழங்குமாறு கோரினர். சர்வ சமய சம்மேளனப் பிரதிநிதிகளையும் ஆயர்கள் சந்தித்தனர். அந்த அமைப்பின் முக்கியஸ்தர்களான சோபித தேரரையும் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக பேராசிரியர் விலன் வெவவையும் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இலங்கையில் தொடரும் யுத்

(14ஆம் பக்கம் பார்க்க)

### புத்தர் சிலைத் தகர்ப்பை எதிர்த்து

## 5 ஆயிரம் பிக்குகள் கொழும்பில் திரண்டு ஆர்ப்பாட்டம் செய்வர்

கொழும்பு,மார்ச்11

ஆப்கானிஸ்தானில் உள்ள புராதன புத்தர் சிலைகளைத் தகர்த்து வரும் தலிபான்களின் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை கொழும்பில் நடத்துவதற்கு பௌத்த மகா சம்மேளனம் ஏற்பாடு செய்துள்ளது.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட பௌத்த பிக்குகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதேவேளை -

தலிபான்களின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து பௌத்த சாசன அமைச்சு செவ்வாய்க்கிழமை முதல் கையெழுத்து வேட்டை ஒன்றை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளது.

கண்டி மற்றும் கொழும்பு உட்பட நாட்டில் உள்ள சகல பௌத்த விகாரைகளிலும் வைத்து பொதுமக்களின் கையெழுத்துக்களைச் சேகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. (ஐ-6)

## ஆயுதக் கொள்வனவு மோசடி; கேணல், 4 சிப்பாய்கள் கைது!

கொழும்பு,மார்ச்11

பல லட்சம் ரூபா பெறுமதியான இராணுவத் தளபாடக் கொள்வனவு மோசடி தொடர்பான விசாரணைகளுக்காக இராணுவக் கேணல் ஒருவரும் வேறு நான்கு சிப்பாய்களும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

'மகாஜன நிறுவனம்' என்ற பெயரில் போலி வர்த்தக நிறுவனம் ஒன்று சமர்ப்பித்த ஐந்து போலி கொடுப்பனவுப் பத்திரங்களின் பேரில் 90 லட்சம் ரூபா பணம் இராணுவ நிதியில் இருந்து வழங்கப்பட்டிருப்பதாக இரகசியப் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த முறைகேடான பணக் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக

(14ஆம் பக்கம் பார்க்க)

### யுத்தம் இவ்வாண்டு நிறுத்தப்படாவிட்டால்

## பாரிய பொருளாதார நெருக்கடியை நாடு எதிர்கொள்ளும் ஆபத்து!

### அமைச்சர் பீரிஸ் அரசுக்கு எச்சரிக்கை

கொழும்பு,மார்ச்11

இந்த வருடத்துக்குள் யுத்தத்துக்கு முடிவு காணப்படாவிட்டால் நாடு பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கும் ஆபத்து இருப்பதாக பிரதி நிதியமைச்சரும் அரசமைப்பு விவகார அமைச்சருமான ஜீ.எல்.பீரிஸ் எச்சரித்துள்ளார்.

இந்த ஆபத்தான பொருளாதார நிலைமை குறித்து அவர் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டி இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டின் பொருளாதார நிலைமை குறித்து அமைச்சர் பீரிஸுடன் ஜனாதிபதி நேற்று முன்தினம் கலந்தாலோசனை நடத்தினார். அச்சமயமே நாட்டின் பொருளாதார நிலை குறித்து அமைச்சர் பீரிஸ் எச்சரிக்கை செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

வரவு செலவுத் திட்டம் மக்கள் மீது பெரியளவில் பளுவைச் சுமத்தாவிட்டாலும், யுத்தம் தொடர்ந்தால் அதற்குத் தேவையான நிதியைப் பெறுவதற்காக மக்கள் மீது மேலும் சுமைகளைச் சுமத்துவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

யுத்தம் இந்த வருடத்துக்குள் முடிவுக்கு வராவிட்டால், தற்சமயம் யுத்தத்துக்கு ஒதுக்கிய 7,500 கோடி ரூபா நிதியை மேலும் அதிகரிக்க வேண்டி வரும் இதன் காரணமாக

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### சின்னப்பொடி இரத்தினசுவாமி

(அச்சுவேலி வடக்கு)

அகில இலங்கை சமாதானநீதிவானாகப் பதவியேற்றுள்ள திரு. இரத்தினசுவாமியைப் பல்லாண்டு காலம் வாழ்ந்து சேவையாற்ற வேண்டும் என்று அச்சுவேலி உலவிக்குளம் சித்திவிநாயகரை இறைஞ்சுகின்றோம்.

எஸ்.நடேசலிங்கம் (காந்தி) குடும்பம்,
*அச்சுவேலி.*
எஸ்.பாலசுந்தரம் (தேவன்) குடும்பம்,
*சிவகாமி அம்மன் கோயிலடி, இனுவில் கிழக்கு.*

(85269)

## பாராட்டி வாழ்த்துகிறோம்



பேராதனைப் பல்கலைக்கழகத்தின் Biometry துறையில் யாழ். பல்கலைக்கழக விவசாய பீட விரிவுரையாளர்

### *திருமதி சிவமதி சிவசந்திரன் அவர்கள்*

'கலாநிதி'ப் பட்டம் பெற்றுள்ளார்.

Biometry துறையில் யாழ். பல்கலைக்கழகத்திலேயே முதல் கலாநிதி என்ற பெருமைக்குரிய இவரை சகல வளங்களும் பெற்று நீடூழி வாழ்கவென இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

நண்பர்கள்,
யாழ்.பல்கலைக்கழக விவசாயபீடம்.

(85239)

## வாழ்த்தி மகிழ்கின்றோம்



பொன்விழாக் கண்ட

### திரு.க.தேவராஜா அவர்கள்

(வணிகத்துறைத் தலைவர், யாழ். பல்கலைக்கழகம்)

வணிகத்துறைக்கோர் ஒப்பிலாத் தலைவன்
கல்வி உணர்த்தும் கலங்கரை விளக்கம்
என்றே பலரும் அறிவர் உம்மை
இனிய புன்னகை மலர்ந்த இதயம்
பதவிகள் கண்டும் மயங்கா மாண்பு
ஒரு நாள் கண்டபோதும் நினைவுடன்
இன்னகை புரியும் எழில்மிகு வதனம்
அனைத்தும் கொண்ட அரியதோர் மனிதன்
எவர்க்கும் உதவ முன்வரும் புனிதன்
என்றே நாங்கள் அறிவோம் உங்களை
உம்பணி தொடர்க! நன்றே வாழ்க!!

வெளிநிலை வணிகமாணி மாணவர்கள்,
பட்டப்படிப்புக்கள் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(85243)

## தவறிவிட்டன

செங்குந்த வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம் (செங்குந்த இந்துக் கல்லூரி அருகில்) எனும் முகவரியைச் சேர்ந்த **சசிலலிதா சிறிசேனா** ஆகிய எனது **தே.அ. அட்டை (816471982V), விசேட அ. அட்டை (0902030954), பாடசாலை அ.அட்டை** ஆகியன கறுப்பு நிற பேர்ஸ் உடன் கல்வியங்காட்டிற்கும் நல்லூர் பிரதேச செயலகத்துக்கும் இடையில் 09.03.2001 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்படி முகவரியில் ஒப்படைத்துதவவும்.

(85273)

## தேவை

மருந்தகத்தில் வேலை செய்ய, பழக விரும்பும், பெண் பிள்ளைகள் தேவை.

*புதிய குறிஞ்சி மருந்தகம்,*
*பரமேஸ்வராச் சந்தி.*
*(கம்பஸ் சந்தி)* (85253)

## SHAMROCK

**A/L புவியியல்**
"எறியம்"
**Mr.கிரி**
Mon.,Fri. 3-5 p.m
★ Gr. 4 முதல் O/L வரை
ஈச்சமோட்டை வீதியில்
★ Spoken English
(C/15653)

## காணவில்லை



**செல்லையா சபாரட்ணம்**

என்பவரை 08.03.2001 வியாழக்கிழமை தொடக்கம் காணவில்லை. தகவல் தெரிந்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் விலாசத்துக்கு அறியத்தரவும்.

**திருமதி வசீகரன் கோமகள்,**
இல.67,சிவன்பண்ணை றோட்,
கொட்டடி, யாழ்ப்பாணம்.
தகவல்: *வ.கோமகள் (மகள்)*

## ராஜா

யாழ்ப்பாணம்
தமிழில்
**டைட்டானிக்**
காட்சிகள்: 10.30, 2.30 (பு.நே.)
(C/15473)

## லஷ்சுமி இணுவில்

கார்த்திக், மந்த்ரா,
செந்தில், கவுண்டமணி
நடித்த
**கண்ணன் வருவான்**
(றீல்ஸ்) காட்சிகள்: 11.00, 2.30 (பு.நே.)

## நாகம்ஸ்

சுன்னாகம்
இன்று முதல்
பிரசாந்த், தேவயானி,
பிரகாஷ்ராஜ் நடித்த
**அப்பு**
(றீல்ஸ்)
காட்சிகள்:11.00, 2.30
(புதிய நேரம்) (84251)

## நெஞ்சில் நிலைத்த நினைவுகள் அகன்றது ஆண்டுகள் பதினைந்து

மலர்வு
06 - 01 - 1927



உதிர்வு
26 - 02 - 1986

### திருமதி கந்தையா மீனாட்சி

(துணைவி, தையிட்டி - காங்கேசன்துறை)
*திதி: (11.03.2001) துதியை (தேய்பிறை)*

அன்புடன் எம்மைத் தூக்கி
ஆர்வமோடு உச்சி மோந்து
இன்பமாய் எல்லாம் ஆகி - எம்
துன்பங்கள் களைந்த தாயே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

*கலைமகள் வீதி,*
*தையிட்டி, காங்கேசன்துறை,*
*கலட்டி வீதி,*
*கோண்டாவில் மேற்கு,*
*கோண்டாவில்.*

உங்கள் நினைவுடன் வாழும்
சகோதரி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பெறாமக்கள்.

(85256)

## மரண அறிவித்தல்கள்

### S.N.இராசா (சட்டத்தரணி)

உதவித் தேர்தல் ஆணையாளராகக் கடமையாற்றி (கொழும்பு) ஓய்வு பெற்றவரும், பிரபல சட்டத்தரணியாக (Advocate) விளங்கியவரும், கனடாவில் தமிழர்களின் வழக்குகள் பலவற்றில் இலவசமாக வாதாடிவென்று கொடுத்தவரும், சாயி பக்தருமாகிய S.N.இராசா அவர்கள் 08-03-2001 இரவு அமரரானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12-03-2001) திங்கட்கிழமை அன்னாரது சிரேஷ்ட புத்திரியின் கனடா இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை அவரது இலங்கை வாழ் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

சிரேஷ்டபுத்திரியின் கனடா முகவரி
Mrs.V.Sivasegaram.
706,100 Prudential Drive,
Scarborough,
Ontario, M1P4V4
Canada.

தகவல்:
அ.விஸ்வநாதன்
(ஆப்த நண்பரும், இளைப்பாறிய அதிபரும்)
அளவெட்டி.

(85244)

### சுப்பிரமணியம் மாணிக்கம்

(ஓய்வு பெற்ற அதிபர், அளவெட்டி அ.த.க. பாடசாலை, தலைவர், தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கம்.)

பண்ணாலையைப் பிறப்பிடமாகவும் மூளாயை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் மாணிக்கம் அவர்கள் நேற்று (10-03-2001) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம்-இளையபிள்ளை தம்பதிகளின் மூத்த புதல்வனும் ஆசைப்பிள்ளையின் அன்புக் கணவரும் சிவஞானம், சிவயோகம், இலட்சியன், இந்திராதேவி, கலாவதி, மகேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவகுமார், கணநாதன், சகுந்தலாதேவி, வசிகரன், பாலச்சந்திரன், ஜெயச்செல்வி ஆகியோரின் அன்பு மாமனாரும், ராகவன், தினேஷ், மைதிலி, சுதாகரன், பிரபாகரன், வாணீசன், சுகிர்தினி, சுவரம்யா, விபுலன், சங்கீதா, சஜீபன், பார்த்தீபன் ஆகியோரின் அன்புப் பேரனாரும், பொன்னுப்பிள்ளை, அன்னப்பிள்ளை, காலஞ்சென்ற தம்பையா மற்றும் ஆசைப்பிள்ளை, கனகசபை ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11-03-2001) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு மூளாயில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மூளாய் றோட்,*
*மூளாய்,*
*சுழிபுரம்.*

தகவல்:
மனைவி, மக்கள்,
மருமக்கள்.

(85257)

### திருமதி வாலைமுத்து மீனாட்சி

(வல்லை வீதி, சங்கானை)

சங்கானை வல்லை வீதியைச் சேர்ந்த திருமதி வாலைமுத்து மீனாட்சி 09-03-2001 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகர் தம்பதிகளின் மகளும், காலஞ்சென்ற வாலைமுத்துவின் அன்பு மனைவியும், மகேஸ்வரி இரத்தினம், சின்னக்கிளி, காலஞ்சென்ற தேவி மற்றும் கனகராசா(பொறுப்பதிகாரி, ஊர்காவற்றுறை பிரதேச சபை, காரைநகர் வடக்கு உப அலுவலகம்), சிவலிங்கம் நாகேஸ்வரி (கொழும்பு), சரஸ்வதி (கொழும்பு), நாகராசா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நேற்று (10.03.2001) சனிக்கிழமை நடைபெற்றுப் பூதவுடல் பிற்பகல் 12.00 மணிக்கு சங்கானை கரைச்சி மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்:
வா.கனகராசா
(மகன்)

(C/15646)

உதயன்

## உடனடியான விழிப்புணர்வு தேவை

யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி இ. த. விக்னராஜா, பெரியபுலம் மகா வித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில், அதிர்ச்சி தரும் தகவல் ஒன்றை வெளியிட்டார்.

குடாநாட்டில் அதிகரித்து வரும் திருட்டுக்களுக்கு பராயம் அடையாத— பதினாறு வயதுக்கு உட்பட்ட— சிறுவர்கள் பயன்படுத்தப்படுகிறார்கள் என்பதே அந்த அதிர்ச்சித் தகவல்.

குடாநாட்டில், முன்னர் எப்போதும் இல்லாதவாறு திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. நகரங்கள், உப நகரங்கள், கிராமங்கள், சிற்றூர்கள், குறிச்சிகள் என்று எல்லா இடங்களிலும் திருட்டுக்கள் மலிந்துள்ளன. வீடுகள், வர்த்தக நிலையங்கள் என்று மட்டுமன்றி, ஆலயங்கள் மற்றும் பொது இடங்கள் எதனையுமே விதிவிலக்கு வைக்காமல், திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டி வருகிறார்கள்.

கடின உழைப்பின் மூலமும், அரும்பாடுபட்டும் அடுத்தவர்கள் தேடிய பொருள்களை ஒரு சில மணி நேரத்தில் தமதாக்கிக் கொள்ளும் திருடர்கள், பல சந்தர்ப்பங்களில் உடைமையாளர்களுக்கு உடற் தீங்கும் செய்து விடுகிறார்கள்.

திருட்டுக்கள் தடுப்பார் இன்றிப் பெருகுவதால் மக்கள் தாம் பாதுகாப்பற்றவர்களாகி, உடைமைகளுக்கும் பாதுகாப்பு இல்லாதவர்களாக பீதியுடன் வாழ வேண்டிய பயங்கரமான சூழ்நிலை தோன்றி உள்ளது. அடுத்தவன் பொருளைக் களவாடுவது பெரும் சமூகக் கொடுமையாகும். அந்தக் கொடுமையைச் செய்வதற்குச் சிறுவர்களைப் பயன்படுத்துவது— அவர்கள் அத்தொழிலில் ருசி காணச் செய்வது—அத்தொழிலைப் பயிற்றுவிப்பது —நிகழ்காலத்தில் மட்டுமன்றி எதிர்காலத்திலும் பெரும் பயங்கரச் சூழ்நிலையை உண்டாக்கும்.

சிறுவர்களின் வறுமை நிலையையும், அவர்கள் பெற்றோர்களால் சரியாக வழி நடத்தப்படாமல் இருப்பதையும் தமக்குச்சாதகமாக்கிக்கொண்டு திருடர்கள் தமது சமூகவிரோதத் தொழிலைச் சாதுரியமாகச் செய்து வருகிறார்கள்.

திருட்டுக்களைத் தடுத்து மக்கள் பாதுகாப்பாக வாழ்வதற்கு வகைசெய்வது சமூக நலனில் அக்கறை உள்ளவர்களுக்குப் ஒரு வகைச் சவால் என்றால் —

திருட்டுத் தொழில் புரிவோரின் எடுப்பார் கைப்பிள்ளைகளாக, கையாள்களாக அவர்களின் பொறிக்குள் சிறுவர்கள் வீழ்ந்து விடாமல் தடுப்பது—காப்பாற்றுவது— மிக மிகப் பெரும் சவாலாகும்.

அந்தந்தப் பகுதியின் மூத்த பிரஜைகளும், சமூக சேவையாளர்களும் உடனடியாக முனைப்பாகச் செயற்படா விட்டால், மற்றெல்லாச் சமூகச் சீரழிவுகளையும் மூந்திக் கொண்டு திருட்டுச் சிறுவர் சீரழிவு எங்கள் எதிர்காலச் சந்ததியினரை நாசமாக்கிவிடும்.

நீதிபதி சுட்டிக்காட்டியது போல, வறுமைகாரணமாகவும், சரியான வழிநடத்தல் இல்லாத காரணமாகவும் சிறுவர்கள் இந்தப் பயங்கரப் பொறிக்குள் விழ்கிறார்கள். இரண்டு வகையினரையும் பாதுகாப்பதற்கு இரு முனைத் திட்டம் தேவை.

சமூக சேவை இயக்கங்கள், பாடசாலைகள், ஆலயங்கள், சமய, சமூக நிறுவனங்கள் அதனை வகுத்துத் தாமதமின்றி செயற்படுத்தவும், அதன் பொருட்டு உழைக்கவும் வேண்டும். பெற்றோர்கள், ஆசிரியர்கள், சமய சமூகப் பெரியவர்கள் உடனடியாக விழித்துக் கொண்டு விரைந்து அக்கறை காட்ட வேண்டிய விவகாரம் இது.

# யாழ். மாவட்ட ஆசிரியர்கள் 49 பேருக்கு மேல்மாகாணத்துக்கு இம்மாதம் இடமாற்றம்

யாழ்ப்பாணம், மார்ச் 11

வடக்கு — கிழக்கு மாகாணத்தில் இருந்து மேல் மாகாணத்திற்கு இடமாற்றம் கோரிய ஆசிரியர்களில் 80 ஆசிரியர்களை மேல் மாகாணத்துக்கு இடம் மாற்றம் செய்ய மேல் மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழு இணக்கம் தெரிவித்துள்ளது.

வடக்கு—கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் சிபார்சு செய்யப்பட்டு மேல் மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவுக்கு அனுப்பப்பட்ட 80 ஆசிரியர்களில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 49 ஆசிரியர்கள் எதிர் வரும் 19ஆம் திகதிக்கு முன்னர் மேல் மாகாணக் கல்விப் பணிப்பாளருடன் தொடர்பு கொண்டு தமக்குரிய பாடசாலைகளில் கடமையேற்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட திகதியில் தமது கடமையைப் பொறுப்பேற்க முடியாதவர்கள் மேல் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு எழுத்து மூலம் தெரிவித்து அதன் ஒரு பிரதியை சி சரவணபவானந்தன், நிர்வாகச் செயலாளர், இ. த. ஆ. சங்கம், 40 மத்திய வீதி, கொழும்பு-15' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த. பஞ்சலிங்கம் தெரிவித்துள்ளார்.

ஆசிரிய இடமாற்றம்பெறும் ஆசிரியர்களின் பெயர்களும் அவர்கள் ஏற்கனவே கடமை புரிந்த பாடசாலை விவரமும் வருமாறு:-

திருமதி கே. சந்திரகுமார் (சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை), வி. தில்லைநாதன் (முத்துத்தம்பி ம.வி.), ரி. ரட்ணகுமார் (ஹாட்லிக் கல்லூரி), திருமதி எஸ். ரட்ணகுமார் (மெதடிஸ்த மிஷன் உ. த.பா), திருமதி ஞானசேகரம்பிள்ளை (ஹாட்லிக் கல்லூரி), எஸ். வரதன் (உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம்), திருமதி கே. எஸ். இந்துசிங்கம் (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி), திருமதி பந்மஜா லோகநாதன் (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி), திருமதி டபிள்யூ மோகனதாஸ் (வீமன்காமம் ம. வி.), வி. ஏ. ராமச்சந்திரன் (கோட்டக் கல்விப் பணிமனை வலிகாமம்).

எஸ். கே. கணேசலிங்கம் (புங்குடுதீவு கணேச வித்தி.) திருமதி கே. பரமகுரு (நீர்வேலி றோ. க. த), திருமதி எஸ். ஜே. ஜெயக்குமார் புனித சாள்ஸ் ம. வி), திருமதி பி. சபாநாதன் (கொழும்புத்துறை புனித ஜேம்ஸ் வித்தி.), திருமதி ஆர், சிறீதரன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), திருமதி எஸ் உமாபதிசிவம் (கன்னியர்மடம் ம வி.)

எஸ். குணசிலன் (அல்லாரை அ. த. க. வித்தி), செல்வி யு. ஆர். இராசேந்திரம் (புங்குடுதீவு ம. வி ), பி கிருபாகரன் (புனித ஜேம்ஸ் மகளிர் வித்தி).

எஸ் குணசீலன் (அல்லாரை அ.த.க. வித்தி.), செல்வி யு. ஆர். இராசேந்திரம் (புங்குடுதீவு ம. வி ) பி. கிருபாகரன் (புனித ஜேம்ஸ் மகளிர் வித்தி) திருமதி வி. இராமநாதன் (வட்டு. திருநாவுக்கரசு ம வி ) திருமதி ப. தனபாலசுந்தரம் (முத்துத்தம்பி ம.வி ), திருமதி எம். அருமைநாயகம் (கனகரத்தினம் ம, ம, வி,)

ஆ. மோகனசுந்தரம் (ஸ்கந்தவரோதயக் கல்லூரி), இ. தவபாலன் (கனகரத்தினம் ம. ம. வி.), த. சிவகுமாரன் (கோண்டாவில் பரஞ்சோதி வித்தி ), திருமதி சி. ஆனந்தன் (வடமராட்சி இ ம கல்லூரி), திருமதி ஜெ. கனகேந்திரன் (அச்செழு சைவப்பிரகாச வித்தி.), செல்வி க. செல்வமாணிக்கம் (வசாவிளான் ம. ம. வி.), திருமதி கா புவனேஸ்வரன் (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), திருமதி க. நவரத்தினராஜா (நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்கினேஸ்வரா வித்தி.).

திருமதி கா. யோகதாசன் (அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தி ), திருமதி க. குணசீலன் (வீரசிங்கம் ம. வித்தி). திருமதி சா. பரமலிங்கம் (வீரசிங்கம் ம. வித்தி.), திருமதி சோ. பரம்சோதி (வீரசிங்கம் ம. வித்தி ), திருமதி தே செல்வேஸ்வரன் (கைதடி நுணாவில் அ த. க. பாடசாலை), செல்வி அ வடிவேலு (உசன் இராமநாதன் ம வி ), அருட் சகோதரி ஜெ றொட்றிக்கோ (நெடுந்தீவு றோ. க. வித்தி.), திருமதி ச. ஜோர்ஜ் (பாஷையூர் சென். அன்ரனீஸ் பெண்கள் பாடசாலை).

திருமதி செ. பதமநாதன் (கொட்டடி நமசிவாயவித்தி), திருமதி பே. சதானந்தசிவம் (வட்டு இந்துக் கல்லூரி), திருமதி த ஜெயசீலன் (யூனியன் கல்லூரி), திருமதி நளினி சாந்தி (இராமநாதன் கல்லூரி), திருமதி கு. சிவனேஸ்வரன் (இராமநாதன் கல்லூரி).

திருமதி ப. ஜேசுதாசன் (கன்னியர் மடம் ம. வித்தி.), திருமதி எம் ரி. தங்கநாயகம் (சென்ஜோசெப் வித்தி.), திருமதி ச. இராஜரெத்தினம் (புனிதசாள்ஸ் ம வி.), திருமதி க. நாகராசா (யாழ் இந்து ஆரம்ப பாடசாலை), திருமதி ப கேதீஸ்வரநாதன் (புனித ஜோன் பொஸ்கோ வித்தி ). திருமதி கே. இராமச்சந்திரன் (உடுவில் மான்ஸ் த. க. பாடசாலை).

(ஜ-10-ரி)

## தென்மராட்சி மாணவருக்கு!

பளை—மாசார் அ. த. க. பாடசாலையைச் சேர்ந்த 5 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு பாடசாலை அதிபர் கேட்டுள்ளார்.

நாளை திங்கட்கிழமை நெல்லியடி ம. வி. யில் தமது பெற்றோர்களுடன் குறிப்பிட்ட மாணவர்களைச் சமுகமளிக்குமாறும் வேண்டப்படுகின்றனர். (க-5)

★ ★ ★

மட்டுவில் வடக்குச் சந்திரமௌலீச வித்தியாலயத்தில் கல்வி கற்றுத் தற்போது வேறு பாடசாலைகளில் கற்கும தரம் 5மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சை விண்ணப்பத்தில் கையொப்பமிடத் தமது பெற்றோருடன் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரிக்கு வருமாறு பதிலதிபர் கேட்டுள்ளார். (க)

★ ★ ★

மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயத்தில் கல்வி கற்றுத் தற்போது வேறு பாடசாலைகளில் கல்வி பயிலும் தரம் 5 மாணவர்களின் புலமைப் பரிசில் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவத்தைப் பூரணப்படுத்துவதற்கு மாணவர்களின் விவரங்கள் தேவைப்படுவதால் எதிர்வரும் 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு. ப. 9. 00 மணிக்கு மருதனார்மடம் வலயக்கல்விப் பணிமனைக்கு வருகை தருமாறு அதிபர் ச. ஞானலிங்கம் கேட்டுள்ளார். (க)

★ ★ ★

மிருசுவில் றோ. க. வித்தியாலயத்தில் கல்வி பயின்று தற்போது இடம்பெயர்ந்து வேறுபாடசாலைகளில்கற்கும் தரம்-5 மாணவர்களையும் கடந்த வருடம் (2000) தரம் 8 இல் கற்ற மாணவர்களையும் உடனடியாகச் சந்திக்குமாறு அதிபர் அறிவித்துள்ளார்.

தரம்5 மாணவர்கள் குடும்ப வருமானத்தை உறுதி செய்யும் கிராமசேவையாளரின் கடிதத்துடனும், தரம் 8 இல் கற்றவர்கள் விசேட அடையாள அட்டையின் 3 போட்டோ பிரதிகளுடனும் வட்டு. மத்திய கல்லூரியில் இயங்கும், மேற்படி பாடசாலைக்கு வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது

அதேசமயம் வடமராட்சி பிரதேசத்தில் வசிக்கும் மாணவர்களை நாளை திங்கட்கிழமை நெல்லியடி கிறிஸ்ரல் கல்வி நிலையத்தில் இயங்கும் கொடிகாமம் திருநாவுக்கரசு ம. வித்தியாலயத்திற்குவருகை தருமாறும் அதிபர் எவ். எக்ஸ். அன்ரன் அறிவித்துள்ளார். (க)

★ ★ ★

வேம்பொடுகேணி சி. சி. த. க. பாடசாலையைச் சேர்ந்த 5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் வலிகாமத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் நாளை திங்கட்கிழமை ஆனைக் கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயத்தில் கையொப்பம் வைப்பதற்கு வருகை தருமாறும்அதிபர் கேட்டுள்ளார். (க)

★ ★ ★

மீசாலை விக்னேஸ்வர ம. வி. யில் கல்வி கற்றுத் தற்போது இடம்பெயர்ந்து வேறு பாடசாலையில் தரம் 5, 13 இல் கல்வி கற்பவர்கள் பரீட்சைக்கு விண்ணப்பிக்க வேண்டியிருப்பதனால் தங்களது விவரங்களை மானிப்பாய் மகளிர் கல்லூரியில் அல்லது யார்க்கரு விநாயகர் வித்தியாலயத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு அதிபர் எஸ் கந்தசாமி தெரிவித்துள்ளார். (க)

## நாளை

மாசி 28

திங்கட்கிழமை

திதி: திருதியை மாலை 6 41 வரை;

நட்சத்திரம்: சித்திரை முன் இரவு 11-01 வரை.

சுபநேரம்: 12.23 — 1.53

ராகுகாலம்: 7.53 — 9.23

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

உழைப்பு உடலைப் பலப்படுத்தும்; கஷ்டங்கள் மனதைப் பலப்படுத்தும்.

# மக்களின் எதிர்பார்ப்பில் மண்ணைத் தூவிய செயல்

## பட்ஜெட் குறித்து ரணில் கருத்து

கொழும்பு, மார்ச் 11

மக்களின் எதிர்பார்ப்பில் மண் தூவிய செயலாகவே இந்த வரவு - செலவுத் திட்டம் அமைந்துள்ளது இதனை எமது கட்சி ஒருபோதும் ஆதரிக்காது.

மக்களின் வாழ்க்கைச் செலவைக் குறைக்க இந்த வரவு - செலவுத் திட்டம் எந்த வகையிலும் பயனளிக்காது.

இப்படிக் கூறியுள்ளார் ஐ. தே. க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

கொழும்பிலுள்ள சுயாதீன தொலைக்காட்சி சேவை ஒன்றுக்கு அளித்த பிரத்தியேக பேட்டியிலேயே அவர் இப்படிக் கூறியுள்ளார்.

பலம் வாய்ந்த பொருளாதாரக் கட்டமைப்பை உரமாக்கி அதனை முன்னெடுத்துச் செல்லும் முயற்சி தற்போதைய அரசாங்கத்திடம் துளிகூட இல்லை.

இன்னும் ஆறு மாத காலத்துக்கு மக்கள் அரசாங்கத்திடம் எதையும் எதிர்பார்க்கக் கூடாது என அரசாங்கம் நினைக்கிறது என ரணில் அந்தப் பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்

(க)

## 3 கப்பல்களிலிருந்து ஒரே வேளையில் பொருள்கள் இறக்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 11

பருத்தித்துறை துறைமுகத்தில் தற்பொழுது 3 கப்பல்களில் இருந்து ஒரே நேரத்தில் பொருள்கள் இறக்கப்பட்டு வருவதாகச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன

'கோமாரி' கப்பலில் தனியாருக்கான 19 மோட்டார் சைக்கிள்கள், பிரதேச சபைகளுக்கென 4உழவு இயந்திரங்கள், 'போரூட்' நிறுவனத்துக்கான வான் ஒன்று, தனியாருக்கான 9 லான்மாஸ்ரார்கள், லொறி உட்பட விவசாய உள்ளீடுகள், மின்சார உபகரணங்கள், கோழித்தீன், கம்பிகள், மதுபானவகைகள் மற்றும் தேங்காய்களும் எடுத்து வரப்பட்டுள்ளன.

'பொல்கொட' கப்பலில் சீமெந்துக் கூட்டுத்தாபனம், கட்டடப்பொருள்கள் கூட்டுத்தாபனம் மற்றும் தனியாருக்கென 32 ஆயிரம் சீமெந்துப் பைக்கற்றுகளும் —

'இந்துருவலி' கப்பலில் யாழ். செயலகத்துக்கான சீனி, பால்மா ஆகியவற்றுடன் தனியாருக்கான உணவுப் பொருள்களும் எடுத்து வரப்பட்டுள்ளதாக அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (க-10-ரி)

## மல்லாகத்தில் சிறுவர் பூங்கா திறப்பு விழா

வலி. வடக்கு, மார்ச் 11

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தில் மல்லாகம் வர்த்தக சங்கத்தினால் நிர்மாணிக்கப்பட்ட ஸ்ரீபாஸ்கரன் சிறுவர் பூங்கா திறப்பு விழாவும் நுழைவாயில் வளைவு பெயர்ப் பலகைத் திரை நீக்கம் செய்யும் வைபவமும் நாளை திங்கட்கிழமை காலை 9-30 மணிக்கு வலி. வடக்குப் பிரதேச சபைத் தலைவரும் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவருமான திருமதி பாஸ்கரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொள்ளும் கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பூங்காவையும் நுழைவாயில் பெயர்ப் பலகையையும் திறந்து வைக்கவுள்ளார். (ஐ-86)

# ஜனாதிபதித்தேர்தல், பொதுத்தேர்தலை காபந்து அரசின் கீழ் நடத்த வேண்டும்

## அரசமைப்பைத் திருத்துமாறு ஜே. வி. பி. யோசனை

கொழும்பு, மார்ச் 11

எதிர்காலத்தில் ஜனாதிபதித் தேர்தல், பொதுதேர்தல் என்பன இடைக்கால (காபந்து) அரசாங்கம் ஒன்றின் கீழ் நடத்தப்பட வேண்டும் என்றும், இதற்கான திருத்தயோசனை அரசமைப்பின் 17 ஆவது திருத்த சட்டத்தில் உட்படுத்தப்பட வேண்டும் என்றும் ஜே. வி. பி. யோசனை தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சிகள் இணைந்து சமர்ப்பிக்க உள்ள நான்கு சுயாதீன ஆணைக்குழுக்கள் அடங்கலான யோசனைகளுடன் இந்த யோசனையையும் இணைக்குமாறு ஜே. வி. பி. கோரியுள்ளது.

நான்கு சுயாதீன ஆணைக் குழுவுக்கான யோசனையுடன் உட்படுத்த வேண்டிய யோசனைகளை ஜே. வி. பி. நாடாளுமன்றக் குழுத்தலைவர் விமல் வீரவங்ச ஐ.தே.க. உபதலைவர் கரு ஜெயசூரியவிடம் கையளித்துள்ளார்.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிக்க வேண்டும் எனவும் ஜனாதிபதிக்கு எதிராகவும், வழக்கு தாக்கல் செய்யக் கூடியதாகவும், நாடாளுமன்றத்திற்கு அவர் பதில் சொல்லும் வகையிலும் நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்பட வேண்டும் எனவும் ஜே. வி. பி யோசனை தெரிவித்துள்ளது.

சுயாதீன தேர்தல் ஆணைக் குழு, பொலிஸ் ஆணைக்குழு, நீதிமன்ற ஆணைக்குழு, பொதுச்சேவை ஆணைக்குழு என்பவற்றுடன் அரச ஊடக ஆணைக்குழு ஒன்றையும் அமைக்க வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் ஆகிய இரு பிரதான தேர்தல்களும் பதவியிலுள்ள அரசாங்கத்தைக் கலைத்துவிட்டு இடைக்கால அரசாங்கத்தின் கீழ் நடத்தப்பட வேண்டும்.

இடைக்கால அரசாங்கத்தின் தலைவராக பிரதம நீதியரசர் இருப்பதோடு அதன் உறுப்பினர்களாக 5 ஆணைக் குழுவினதும் தலைவர்கள் இருப்பார்கள். தேர்தல் முடிவுகள் வெளியாகும் வரை இடைக்கால அரசு செயற்பட வேண்டும் எனவும் ஜே. வி. பி யோசனை முன்வைத்துள்ளது.

இந்த யோசனை குறித்து எதிர்க்கட்சிகளிடையே ஆராயுமாறும்ஜே. வி. பி கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த யோசனைக்கு இணக்கம் காணப்படாவிடின் இந்த யோசனையை அரசியலமைப்பின் 17 ஆவது சட்டத்தில் உட்படுத்துமாறு ஜே. வி. பி. நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க உள்ளது. பங்களாதேஷிலும் இந்த நடைமுறை உள்ளதாகவும் ஜே. வி. பி கூறியுள்ளது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்காமல் ஆணைக் குழுக்களை அமைத்து பயன் ஏற்படாது எனவும் ஜே. வி. பி. சுட்டிக் காட்டியுள்ளது. (க)

## அங்குரார்ப்பணம்

தென்மராட்சி, மார்ச் 11

பளைப் பிரதேச விவசாய சம்மேளனங்களின் சமாசம் கடந்த வியாழக்கிழமை பிரதேச செயலர் அ. புத்திசிகாமணியினால் புலோலியில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

(க-117)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம், செங்குந்த இந்துக்கல்லூரியின் ஓய்வுபெற்ற அதிபர்

### முருகேசு பரமேஸ்வரன் B A.

(நல்லூர் லயன்ஸ் கழக சாட்டர் உறுப்பினர்)

அவர்களின் மரணச் செய்தி மிகவும் வேதனையைத் தருவதுடன் எல்லோரையும் அதிர்ச்சியடையச் செய்துள்ளது. இவரின் மறைவால் துயருறும் அவரது அன்பு மனைவி, மகன், உறவினர்களின் துன்பத்தில் நாமும் பங்குகொள்வதுடன் அன்னாரின் ஆத்மா முத்தியடையவேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

லயன் வல்லிபுரம் பரமசிவம் ஜே பி.
குடும்பத்தினரும்,
மற்றும் குடும்ப உறவினர்களும்.

(85192)

## இலங்கை நிர்வாக சேவை, இலங்கை கணக்காளர் சேவை

ஆகியவற்றுக்கு

## ஆள்சேர்ப்புப் பரீட்சைக்கான பயிற்சி வகுப்புக்கள்

வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு — கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சின் நெறிப்படுத்தலின் கீழ் பின் குறிப்பிடப்படும் சேவைகளுக்கான ஆள்சேர்ப்புக்கான பரீட்சைகளுக்கு பயிற்சி வகுப்புக்கள் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது

- இலங்கை நிர்வாக சேவையில் வடக்கு—கிழக்கு மாகாணத்திலுள்ள வெற்றிடங்கள் நிரப்புவதற்கு விஷேட பரீட்சை.
- இலங்கை கணக்காளர் சேவையில் சேர்வதற்கான போட்டிப் பரீட்சை.

2. இப்பயிற்சி வகுப்புக்கள் ஸ்ரான்லி வீதியுள்ள இந்த அமைச்சின் மண்டபத்தில் வார இறுதி நாள்கள், விடுமுறை நாள்கள் மற்றும் மாலை நேரங்களில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
3. கணக்காளர் சேவைக்கான ஆள்சேர்ப்பு பரீட்சைக்கான விண்ணப்பங்கள் 26 - 01 - 2001 இன் வர்த்தமானியில் கோரப்பட்டு விண்ணப்ப இறுதித் திகதி 26 - 02 - 2001 ஆக இருந்தது. இலங்கை நிர்வாக சேவை ஆள்சேர்ப்புக்கான விஷேட பரீட்சை விவரங்கள் விரைவில் அறிவிக்கப்படும்.
4. இப்பயிற்சி வகுப்புக்களில் சேரவிரும்பும் தகைமை பெற்றவர்கள் தங்கள் பெயர்களை இந்த அமைச்சின் யாழ்ப்பாணக் கிளை அலுவலகத்தில் பிற் காணப்படும் படிவத்தை நிரப்பி சமர்ப்பிப்பதன் மூலம் பதிவு செய்து கொள்ளலாம்.
5. தேர்ச்சி பெற்ற பயிற்றுநர்கள் இவ்வகுப்புக்களை நடத்துவார்கள். இதற்காக ஒரு கட்டணமும் அறிவிடப்படும்

### படிவம்

1. பயிற்சி பெறவிரும்பும் பாடத்திட்டம்
   இலங்கை நிர்வாக சேவை/ கணக்காளர் சேவை
2. முழுப் பெயர்
3. முகவரி
4. தகைமை
5. மொழி மூலம்
6. பயிற்சி வகுப்புக்களில் பங்கேற்கக்கூடிய காலம் — வாரஇறுதி நாள்கள்/ மாலை வகுப்புக்கள்/ விடுமுறை நாள்கள்
7. வேறு விவரங்கள்

தலைவர்,
வடக்கின் மீள்குடியேற்ற புனரமைப்பு அதிகாரசபை.

(சி/15629)

## கண்ணீர் அஞ்சலி

பன்னாலை கணேச சனசமூக நிலையத்தின் முன்னாள் உபதலைவரும், பொருளாளரும், கணக்காய்வாளரும் எண் பரிசோதகரும், இளைப்பாறிய அதிபரும், தற்போதைய போஷகரும் ஆகிய

### அமரர் சு. மாணிக்கம்

அவர்களின் மறைவையொட்டி ஆழ்ந்த கவலை கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகிறோம்.

பன்னாலை கணேச சனசமூக நிலையம்.

பன்னாலை,
தெல்லிப்பழை.

(85257)

## அறிவித்தல்

சாவகச்சேரி
பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்
பதிவு ஜே/ 1594 - 11.03 1972 (வரைவுள்ளது)


### வாக்காளர் பட்டியல்

சங்கத்தின் கிளைக் குழுத் தேர்தலை முன்னிட்டு 31 — 12 — 2000 ஆம் திகதியில் முடிவுறுத்தப்பட்ட அங்கத்தவர் பட்டியல் தயாரிக்கப்பட்டு, பிரதான வீதி, அச்சுவேலியில் அமைந்துள்ள சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி பட்டியலை எதிர்வரும் 20 . 03 . 2001 ஆம் திகதி வரை பார்வையிடலாம் என்பதையும் ஆட்சேபனைகள் இருப்பின் மேற்படி திகதி வரை சமர்ப்பிக்கலாம் என்பதையும் அறியத்தருகின்றேன்.

(85148) - செயலாளர்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



யா/மா/பே/உ/சங்க வடமராட்சிக் கிளை முன்னாள் தலைவரும், "துவாரகா வெதுப்பக" உரிமையாளருமாகிய

சிவகுருநாதன் (பரம்) அவர்களின்
பாசமிகு தந்தையார்

அமரர்

### மயில்வாகனம் கணபதிப்பிள்ளை (தம்பு)

[முன்னாள் உரிமையாளர், யூனியன் பேக்கரி (நவிண்டில்)]

தோற்றம் 1922–02–02 மறைவு 2001–02–09

அனைத்து நாள் தங்களது அமைதிமுகம்
விழிப்பமையா!
அத்தனை ஊழியர் தம் அகமெல்லாம்
நிறைந்திருந்தோய்!
நனவிலென்ன, கனவிலென்ன
நமது கண்ணில் நினதுருவே
நாள் பொழுதாய் இரங்கவிட்டு
நமைப்பிரிந்து மறைந்தனையோ?

அன்னாரது ஞாபகார்த்தமாக அவரது உருவப்படம் துவாரகா வெதுப்பகத்தில் காலை 10. 30 மணியளவில் அவரின் அன்பரால் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

இந்நிகழ்வுக்கு ஒத்தாசை புரிவதற்காக உற்றார், உறவினர், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் பிரிவால் துயரில் மூழ்கும்
இணைபிரியா அன்பர்
V. S. P. குமார் (ஸ்ரீகுமார்)
(உரிமையாளர், கல்பனா ஸ்ரோர்ஸ், அச்சுவேலி)

கரணவாய் மேற்கு,
கரவெட்டி.

(சி/15648)

# காரணத்தோடு வந்த கருத்து!

**யாழ்**.பொது நூலகத்தில் (07.03.2001ஆம் திகதியன்று) இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் திரு.அஸ்லி வில்ஸ் ஆற்றிய அரசியல் உரையில் இருந்து அமெரிக்கா ஈழத் தமிழர் பிரச்சினையில் எங்கே நிற்கிறது என்பதை மட்டுமா அறிய முடிகிறது...? அந்த நாடு ஈழத்தமிழர் பிரச்சினையில் தனது சுயநலம் கருதி எவ்வளவு அதிதீவிர கரிசனையும் அக்கறையும் செலுத்துகிறது என்பதையும் மேலதிகமாக அறிய முடிகிறது.

இந்தப் பெரிய வல்லரசு இந்த நேரத்தில் - அதாவது பேச்சுவார்த்தைக்கான சுமுக சூழ்நிலை உருவாகிக்கொண்டு வருகின்ற நேரத்தில் - வெண்ணெய் திரண்டு வருகின்ற வேளையில் தாழியை உடைத்தாற்போல் இப்படியான ஒரு கருத்தை ஏன் வெளியிடவேண்டும்? அதுவும் ஈழத் தமிழரின் கலாசாரத் தலைநகராம் யாழ்ப்பாணத்தில் - புத்திஜீவிகள் மத்தியில் வெளியிடவேண்டும்! தவிர, இந்த நேரத்தில் புலிகள் தடைச்சட்டம் விலக்குதல் பற்றிய வழக்கு விசாரணையை விளக்கத்துக்கு எடுத்து புலிகள் பற்றிய வேண்டாத விமர்சனம் செய்து மனுவையும் நிராகரித்து உலகளாவிய ரீதியில் புலிகளுக்கெதிரான ஒரு பிரசாரத்தை ஏன் மேற்கொள்ள வேண்டும்? இவை அனைத்தும் அமெரிக்காகளின் அசல் திட்டமிட்ட கைங்கரியங்கள்.

ஈழத்தமிழரின் இதயத்தில் கூரிய கத்தியால் குத்தியது போன்று அமைந்துவிட்ட அமெரிக்கத் தூதரின் உரையில் குறிப்பிடத்தக்க அம்சம் இதுதான்.

"இலங்கையோ அல்லது அதன் எந்தப் பரதேசமோ எந்த இனத்துவக்குழு மத்தினதும் விசேட உரிமைக்கு உரியது என்பதில் எமக்கு நம்பிக்கை இல்லை - அதனை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை - இலங்கை ஒரு பல்லின, பல்மத, பல்கலாசார நாடு என்றே நாம் கருதுகிறோம்."

இனப்பிரச்சினை நீண்டகாலம் இழுபடுவதற்கு - இவ்வளவுக்கு விஸ்வரூபம் எடுத்ததற்கு - பதினெட்டு வருடகாலப் போரில் பல்லாயிரக்கணக்கான உயிர்கள் காவுகொள்ளப்பட்டதற்கு - பல்லாயிரம் கோடி ரூபா




பெறுமதியான சொத்துக்கள் அழிந்து நாசமானதுக்கு - அடிப்படைக் காரணமே இலங்கை அரசாங்கம் ஈழத் தமிழரின் பிரதேச உரிமையை மறுத்ததுதான்! நிலைமை அவ்வாறிருக்க, அமெரிக்காவுக்கு இது தெரியாதா என்ன? நன்றாகத் தெரியும்! அவர்களின் கருத்து காரணத்தோடுதான் வெளியிடப்பட்டிருக்கிறது!

தற்போது நடைபெறப்போகும் பேச்சுவார்த்தையில் ஈழத்தமிழரின் தாயகப் பூமி வடக்கு - கிழக்குப் பிரதேசம் என்பது அனேகமாக அங்கீகரிக்கப்படலாம். பேச்சுவார்த்தையின் மூலம் தமிழர்களின் சுயநிர்ணயத்தோடு கூடிய ஒரு சமஷ்டி ஆட்சியும் கூட ஏற்பட வாய்ப்புகள் அநேகமுண்டு. அவ்வாறான ஒரு தீர்வு எய்தப்பட்டால் இந்து சமுத்திரத்தின் கேந்திர ஸ்தானத்தில் இருக்கும் திருகோணமலைத் துறைமுகம் ஈழத் தமிழர் பிரதேசத்தில் அடங்கிவிடும். அது இந்தியாவுக்குச் சாதகமான பலனைத் தரும்.

ஈழத் தமிழரை இந்தியா எப்படித் தான் மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடத்தினாலும் கூட, தார்மீக அடிப்படையில் அவர்கள் இந்தியாவின் பக்கமே நிற்பார்கள். அதனால் அமெரிக்கா தென்கிழக்காசிய வட்டகையில் தான் போட்டிருக்கும் திட்டங்களுக்கு இது குந்தகமாக அமைந்துவிடும்.

மாறாக சிங்களவரை ஆதரித்தால் - இலங்கை அரசாங்கத்தை ஆதரித்தால் - திருகோணமலைத் துறைமுகம் தன் ஆதிக்கத்தில் வரும் அதன்மூலம் தென்கிழக்காசிய வட்டகை நாடுகள் விடயத்தில் தான் போட்டிருக்கும் திட்டங்களை - வைத்திருக்கும் ஆசைகளை - நிறைவேற்ற முடியும்.

சிறப்பாக வளர்ந்துவரும் வல்லரசு இந்தியாவுக்கு அச்சுறுத்தலாகவும் இருக்க முடியும். இதற்காக இனப்பிரச்சினைத் தீர்வைக் குழப்புதல் வேண்டும். அதன்மூலம் திருகோணமலைத் துறைமுகத்தை தன் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வர வேண்டும். இதுதான் அமெரிக்கத் தூதரின் உரையில் இருந்து வெளிப்படும் இரகசியம்!

இந்தியா இனியாவது சிந்திக்குமா என்று ஈழத் தமிழர்கள் கேட்கிறார்கள்!

**இந்திரதேவன்,**
மட்டுவில்.

# படகுகள் பழுதடைந்ததால் தீவுப் பகுதிப் பயணிகள் சிரமம்

## எவ்வேளையும் ஆபத்து ஏற்படும் என அச்சம்

ஊர்காவற்றுறை,மார்ச்11

ஊர்காவற்றுறைக்கும் - தீவுப்பகுதிகளுக்குமிடையே சேவையிலீடுபட்டு வந்த 6 படகுகளில் 3 படகுகள் திருத்த வேலைகள் காரணமாக ஏற்கனவே செயலிழந்துவிட்டன. தற்பொழுது மேலும் ஒரு படகு பழுதடைந்துள்ளதால் மக்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

தினமும் ஊர்காவற்றுறை ஊடாக 500க்கும் மேற்பட்ட பயணிகள் பயணம் செய்வதுடன் இப்பகுதிகளில் பிடிபடும் பெருமளவு மீன்களும் இப்படகுகளிலேயே எடுத்து செல்லப்படுகின்றன.

தற்போது 2 படகுகளே சேவையில் ஈடுபட்டு வருவதால் பயணிகள் முண்டியடிக்க வேண்டியுள்ளது. கடந்த புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அனலைதீவு, எழுவைதீவு நோக்கி புறப்பட்ட படகில் மேலதிகமான பயணிகள் ஏறிக்கொண்டனர். பலர் அச்சத்தின் காரணமாக படகில் ஏற மறுத்துவிட்டனர்.

பின்னர் படகு புறப்பட்டது. சிறிது தூரம் சென்றதும் அப்படகு ஒரு பக்கமாகச் சரியத் தொடங்கியது. பயணிகள் பதற்றம் அடைந்தனர். அவர்களில் ஒருவர் தன்னை மீண்டும் கரையில் இறக்கிவிடுமாறு கேட்டார். அதை அடுத்து அவருக்கும் படகோட்டிக்கும் இடையே வாக்குவாதம் முற்றி கைகலப்பு வரை சென்றது.

பின்னர் அந்தப் பயணி மீண்டும் ஊர்காவற்றுறையிலேயே இறக்கி விடப்பட்டார்.

மீண்டும் படகு எழுவைதீவு நோக்கி புறப்பட்டுச் சென்றது. எனினும் எழுவைதீவு இறங்கு துறைக்கு சற்று தொலைவில் அந்தப் படகு கடல் வற்று காரணமாக மணல் திட்டியில் சிக்கிக்கொண்டது. தொடர்ந்து படகு அங்குமிங்கும் பலமாகச் சரியத் தொடங்கியது. அதனைத் தொடர்ந்து படகினுள் கடல் நீர் புகுந்துவிட்டது. உள்ளே இருந்த பெண்கள் குழந்தைகள் அலறத் தொடங்கினர். விபரீதத்தை உணர்ந்து பயணிகள் சிலர் கடலினுள் குதித்து ஒருவாறு மணல் திட்டில் இருந்து படகை மீட்டெடுத்தனர்.

பயணிகள் தொடர்ந்தும் அச்சத்தின் மத்தியிலேயே பிரயாணத்தை மேற்கொண்டு வருகின்றனர். (க-16)

### கசிப்பு விற்பனையால் இணுவில் மக்கள் அசௌகரியம்

யாழ்ப்பாணம்,மார்ச்11

இணுவில் பகுதியில் கசிப்பு உற்பத்தியும் விற்பனையும் தாராளமாக இடம்பெற்று வருவதாக அப்பகுதி மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

இதனால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதுடன் அடிக்கடி அப்பகுதியில் சண்டை சச்சரவுகளும் இடம்பெற்ற வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஊர் மக்கள் கோரியுள்ளனர். (க-ரி)

### கலந்துரையாடல்

யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி மண்டபத்தில் இடம்பெறும் என்று சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார். (க-133)

# அகில இலங்கை ரீதியில் சுவரொட்டிப் போட்டி

யாழ்ப்பாணம்,மார்ச்11

சிறுவர்களினதும், பெண்களினதும் பாதுகாப்புக்கான பிரிவினரால் சிறுவர்கள் துஷ்பிரயோகத்தைத் தடுப்பதற்கான விழிப்புணர்வை பாடசாலை மாணவர்களுக்கிடையேயும், பொதுமக்களிடையேயும் ஏற்படுத்தும் முகமாக நாடளாவிய ரீதியில் சுவரொட்டிப் போட்டி நடத்தப்படவுள்ளது.

10 வயதுக்குட்பட்டோர், 14 வயதுக்குட்பட்டோர், 18 வயதுக்குட்பட்டோர், 18 வயதுக்கு மேற்பட்டோர் என நான்கு பிரிவுகளாக நடைபெறவுள்ள இப்போட்டியில் -

பாடசாலை மாணவர்களுக்குரிய தலைப்புக்கள் வருமாறு: ஆபத்துக்களில் இருந்து பிள்ளைகளைப் பாதுகாத்தல், பிச்சையெடுப்பதில் இருந்து பிள்ளைகளைப் பாதுகாத்தல்; கொடுமைகளில் இருந்து பிள்ளைகளைப் பாதுகாத்தல்; முழுக்க முழுக்க முறைகேடான செயல்கள்; இயற்கைக்கு விரோதமான குற்றங்கள்; சிறுவர் ஊழியம் -

முடிவுகள் எடுக்கும் உரிமை சிறுவர்களுக்கு உண்டு; தமது கருத்துக்களை வெளிப்படுத்த சிறுவர்களை அனுமதியுங்கள்; சிறுவர்களின சிந்தனைகளில் குறுக்கீடு செய்யாதீர்கள்; சிறுவர்களின் சுயமரியாதைக்கு களங்கம் ஏற்படுத்தாதீர்கள்.

இந்தத் தலைப்புக்களுடன் பாலியல் துஷ்பிரயோகம் ஒரு குற்றச் செயலாகும், பாலியல் துஷ்பிரயோகத்திலிருந்து சிறுவர்களைப் பாதுகாத்தல் ஆகியவற்றையும் பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவர்கள் கருத்தில் கொள்ளலாம்.

வரைபடங்களின் தலைப்புக்கள் பெயரிடப்படுவதுடன், எவ்வகை நீர்வர்ணங்களோ, மையோ, பென்சில்களோ, 'சோக்'கட்டிகளோ பயன்படுத்த முடியும்.

ஓவியங்கள் யாவும் 18-20 பிரிஸ்ரல் போட்டில் வரையப்பட்டு பணிப்பாளர், சிறுவர்களினதும் பெண்களினதும் பாதுகாப்பிற்கான பிரிவு, ஸ்ரீலங்கா பொலீஸ்த் திணைக்களம், **205/1**, காசில் வீதி, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் அல்லது அந்தந்த மாவட்ட சிறுவர் பாதுகாப்பு குழுச் செயலாளரிடம் கையளிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-9-10)

# இலக்கிய விமர்சனம் சிக்கலான விடயமல்ல என்று விளக்கும் நூல்

எங்களது கல்வி உயர்கல்வி அமைச்சு க.பொ.த சாதாரண தர வகுப்புக்களில் தமிழ்மொழியும் தமிழ் இலக்கியமும் கற்பிப்பதற்குத் தீட்டிய பாடத்திட்டங்களில் முதன் முதலாக சிறுகதை, நாவல், நாடகம் என்ற நவீன இலக்கியங்களையும் சேர்த்துள்ளது. அந்த நவீன இலக்கியங்கள் எல்லாவற்றையும் எழுதிய அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை பாடத்திட்டத்திலும், பாடநூல்களிலும் தரப்பட்டுள்ள சிறுகதைகள், நாடகங்கள், நாவல் எல்லாவற்றுக்கும் மதிப்பீடுகள் எழுதி 'இலக்கியக் கட்டுரைகள்' என்ற நூலாக வெளியிட்டுள்ளார். அவற்றில் உள்ள குறைகளைச் சுட்டிக் காட்டுவதுடன் மட்டும் நின்றுவிடாது, மாணவர்களின் நலன் கருதிப் பிழைகளைத் திருத்தியதுடன் மேலதிக விளக்கங்களும் தந்துள்ளார்.

க.பொ.த.(சாதாரண தர) பாடத்திட்டத்திலுள்ள ஏழு சிறுகதைகளும உயர் தரத்தில் சேர்க்கப்பட்டுள்ள ஐந்து சிறுகதைகளுமாக மொத்தம் பன்னிரண்டு சிறுகதைகள் திறனாய்வு செய்யப்பட்டுள்ளன. எழுத்தாளர்கள் பயன்படுத்திய உத்திகள், அவர்கள் கையாண்ட உரைநடை ஆகியவை விசேட கவனம் பெறுகின்றன. ஒரே புகழாரமாக சூட்டாமல் அவற்றில் உள்ள குறைபாடுகளையும் சுட்டிக் காட்டியுள்ளார் ஆசிரியர்.

நூல்வரிசை

க.பொ.த.(சாதாரண) தர மாணவர்களுக்குரிய விருப்பப்பாடமான தமிழ் இலக்கியம் பாடத்திட்டத்தில் மலையக எழுத்தாளர் சீ.வி.வேலுப்பிள்ளை எழுதிய 'வீடற்றவன்' நாவல் சேர்க்கப்பட்டுள்ளது. பாடத்திட்டத்தை வரைந்தவர்கள் அந்த நாவலுக்கு 'குறுநாவல்' என்று பிழையாகப் பெயர் சூட்டியுள்ளனர். சுந்தரம்பிள்ளை அந்த ஆசிரியர், சமகாலப் பிரச்சினைகளை எப்படி நாடகமாக்குவது என்பதற்கு எடுத்துக் காட்டாக, இறுதியில் தனது 'பரிசு' நாடகத்தைத் தந்துள்ளார். இலங்கையில் சமூக நாடக வளர்ச்சிக்கு வித்திட்டவர் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை என்பது எல்லோருக்கும் தெரியும். அந்த பேராசிரியரைக் குருவாகக் கொண்டுள்ள அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை தனது குருவின் 'பொருளோ பொருள்' நாடகத்திற்கு நல்லதொரு விமர்சனக் கட்டுரை வரைந்துள்ளார்.

இலக்கிய விமர்சனம் உயர்தர வகுப்பில் தமிழ்மொழி கற்பவர்களுக்கு உரிய பாடம். இலக்கியத் திறனாய்வு செய்வதற்கு எத்தனையோ கோட்பாடுகள் உள்ளன. அந்த வாதப் பிரதிவாதங்களில் இறங்காமல், மாணவர்களுக்கும் இலக்கிய ஆர்வலர்களும், இலகுவாக விளங்கக் கூடிய முறையில் இலக்கிய விமர்சனம் என்றால் என்ன?, அதன்

**நூல் : இலக்கியக் கட்டுரைகள்**
**ஆசிரியர் : அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை**

குறைபாடுகள் என்ன?, அதன் சிறப்புகள் என்ன? என்பவற்றை எளிய, இனிய தமிழில் அழகாக எடுத்துக் கூறியுள்ளார் சுந்தரம்பிள்ளை.

நாவல் பற்றி மூன்று கட்டுரைகள் வரைந்துள்ளார். முதலாவது கட்டுரை "வீடற்றவன்" நாவலை நல்லபடியாகத் திறனாய்வு செய்கிறது. இரண்டாவது கட்டுரை குறுநாவல் எப்படி இருக்கும் என்பதை விளக்கி அதற்கும் நாவலுக்கும் இடையிலுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை எடுத்துக் கூறுகின்றது. மூன்றாவது கட்டுரை "வீடற்றவன்" ஒரு சிறந்த நாவல் என்பதை ஆதாரங்காட்டி நிறுவுகின்றது.

இலங்கை அரசாங்கம் வெளியிட்டுள்ள பாட நூல்களில் நாடகம் பற்றிய ஒரு கட்டுரை கூட இல்லை. சுந்தரம்பிள்ளை வெளியிட்டுள்ள நூலில் நாடகம் பற்றி பல கட்டுரைகள் உள்ளன. அரங்க நாடகம் என்றால் என்ன என்று விளக்கிக் கூறப்பட்டுள்ளது. நாடகம் என்பது நாம் வாழுகின்ற இந்த வாழ்க்கையைச் சித்திரிக்க வேண்டும். ஆகவே பாட நூல்களில் தரப்பட்டுள்ள அறிவுடை நம்பி, கணையாழி ஆகிய நாடகங்கள், மாணவர்களுக்கு நாடகம் கற்பிக்கப் பொறுத்தமற்றவை என்று கூறும்

தமிழில் இலக்கிய விமர்சன நூல்கள் குறைவுதான். இலக்கியத் திறனாய்வு என்பது சாதாரணமாக எல்லோருக்கும் விளங்காத ஒரு சிக்கலான விடயம் என்று சொல்லிச் சிலர் குழப்புவார்கள்; சிலர் பயமுறுத்துவார்கள். அப்படியல்ல. இலக்கிய விமர்சனம் என்பது இலக்கியக் கர்த்தாக்கள், இலக்கிய ஆர்வலர்கள் எல்லோருக்கும் தெரிந்த, எல்லோராலும் செய்யக் கூடிய ஒரு விடயம்தான் என்று விளங்கப்படுத்தி உள்ளார் சுந்தரம்பிள்ளை. இந்த நூலில் உள்ள சில கட்டுரைகள் கனதியானவை. அவை மாணவர்களைவிட ஆசிரியர்களுக்கே கூடுதலாக உதவக் கூடியவை. பொதுவாகக் கூறினால் இலக்கிய ஆர்வலர்கள் எல்லோரும் வாசித்துப் பயனடையக் கூடிய நூல், 'இலக்கியக் கட்டுரைகள்.'

**தம்பிஐயா தேவதாஸ்**

# எப்படியும் வாழலாம் என்ற எண்ணத்தை மாற்ற முடியுமா?

இறைதந்தை "என் அன்பார்ந்த மகன் நீயே, உன் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்" (லூக் 3/22) என்று நம் ஒரே மகனை இறையரசின் உண்மை ஊழியனாக அபிஷேகிக்கின்றார் ஆசீர்வதிக்கின்றார். யோவானின் திருமுழுக்கினால் இயேசு தம் இலட்சியமாகிய இறைமாட்சியை உணர்ந்து கொள்கிறார். தாம் இருப்பதும் இயங்கு வதும், வாழ்வதும் வளர்வதும் இறையாட்சிக்காகவே என்பதை உறுதிப்படுத்துகின்றார். ஒடுக்கப்பட்டோரின் குரலொலி, ஏழைகளின் நண்பன்,

**தவக்காலச் சிந்தனை**

சிறைப்பட்டோரின் விடுதலை, பார்வையற்றோரின் ஒளி என்பதைத் தெரிந்துகொள்கிறார்.

இறையரசுப் பணியிலே தம்மைக் கரைத்துக் கொள்கின்ற இயேசு, தம பணிவாழ்வின் இடைவேளைப் பகுதியில் நிற்கின்றார். தம் பணி வாழ்வில் எதிர்கொள்ளப் போகும் எதிர்ப்புகளின் எதிரொலிகளைச் சந் தித்தவராக தந்தையிடம் தனிமையில் வேண்டுதல் புரிகிறார்.

**12ஆம் நாள்**

இஸ்ரேலின் முதுபெரும் தலைவரான மோசேயும் இறைவாக்கினரின தந்தையெனத் திகழும் எலியாவும் இயேசு தம்பணி வாழ்வில் தொடர்ந்து பயணிக்க உரமூட்டுகிறார்கள்.

இறைதந்தையும் இந்நிகழ்ச்சிக்குத் தூபம் காட்டுவது போல, "இவரே என் மைந்தன்; மைந்தன் நான் தேர்ந்து கொண்டவர் இவரே இவருக்குச் செவி சாயுங்கள்" (லூக் 9/35) என்று இப்போது இந்நிகழ்வின் போது தம் ஆசியை மட்டுமல்லாது, அங்கீகாரத்தையும் வழங்கிறார் அவர் பணி தொடர.

கும்பலொடு சேர்ந்து கூப்பாடுபோடுவது மிக இலகுவானது. தனித்து நிற்க வேண்டி வருகின்ற சந்தர்ப்பத்தில் தைரியத்துடன் நீதிக்கும், உண்மைக்கும் குரல் கொடுப்பது மிக மிகக் கஷ்டமானது; கடினமானது; சவால் நிறைந்தது.

எனினும், அடித்துச் செல்லும் வெள்ளத்தில் அள்ளுண்டு போகாமல் சிறுதுரும்பாய் நிமிர்ந்து நிற்க முடியுமா? எமது இன்றைய இளைய சமூகத்தின், "எப்படியும் வாழலாம், இனி எப்படியும் வாழலாம்!... என்ற ஏகாந்தத்தை மாற்ற மனம் துணிவோமா? இளையோரே மாற்ற முனைவோமா? "இப்படித்தான் வாழ வேண்டும்" என்று இயேசு காட்டிய நெறியில் வாழத் துணிவோமா?

அவர் பணியின் பாதையில் பயணிக்க

அவர் பாதச் சுவட்டில் எம்பாதத்தைப் பதிப்போம்.

**அருட்திரு.**
**அன்புராசா, அ.ம.தி.**

# கோப்பாயில் இன்று பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,மார்ச்11

கோப்பாய் கலைவாணி கல்வி நிலையத்தின் வருடாந்த பரிசு வழங்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நிலைய முதல்வர் சி.சிவரூபன் தலைமையில் நிலைய முன்றிலில் இடம் பெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ். இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கமும், சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் நசிவகடாட்சம், கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலய அதிபர் என்.சண்முகரத்தினம், கோப்பாய் நாவலர் வித்தியாலய அதிபர் வை.குணசேகரம், கோப்பாய் மத்தி றோ.க.த.க. பாடசாலை அதிபர் கே.விநாயகலிங்கம் ஆகியோரும் கலந்து கொள்வர்.

இந் நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்வுகள் மற்றும் ஆசிரியர்களின் பட்டிமன்றம் என்பனவும் இடம் பெறவுள்ளன. (க-10)

## ஏணியிலிருந்து விழுந்து படுகாயம்

கல் உடைக்கும் இயந்திரத்திற்கு கல் எடுத்துச் சென்றவர் ஏணியிலிருந்து தவறி விழுந்து படுகாயமடைந்த சம்பவம் கடந்த வியாழக் கிழமை வல்லையில் இடம்பெற்றது.

கரணவாய் மேற்கைச் சேர்ந்த எஸ்.சிறிதரன் (வயது 21) என்னும் இளைஞர் கைமுறிந்த நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (க-117)

## யோகாசன பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்11

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் ஆண்,பெண் இருபாலாருக்கும் வெள்ளி, சனி தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 6 மணி முதல் 7 மணிவரை யோகாசன வகுப்புகள் நடை பெற்று வருகின்றன. (ஐ)

## மந்திகைக்கு மருந்து வகைகள்

தென்மராட்சி, மார்ச்11

மந்திகை ஆதார வைத்தியசாலைக்கு ஒரு தொகுதி மருந்து வகைகள் யாழ். பிராந்திய மாகாண சுகாதார சேவைகள் அலுவலகத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இரத்த அமுக்கம், இருதய நோய், அஸ்மா ஆகிய நோய்களுக்குப் பயன்படுத்தும் மருந்துகளும் டெக்ரோல், சேலைன் போன்றவையும் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது.

மருந்துகள் தட்டுப்பாடு காரணமாக கடந்த சில தினங்களாக நோயாளர்கள் தனியார் கடைகளை நாட வேண்டிய நிலை இருந்தது குறிப்பிடத்தக்கது.

(க-117)

## பரீட்சைக்கு விண்ணப்பிக்க வசதி

யாழ்ப்பாணம்,மார்ச்11

சுருக்கெழுத்தாளர் பதவிகளுக்கு ஆள் சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தவறியவர்கள் நாளை மறுதினம் 13 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வசதி செய்யப்பட்டிருப்பதாக ஈ.பி.டி.பி. அறிவித்துள்ளது.

இந்தப்பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை மேற்கொண்டுள்ளார் என்றும் ஈ.பி.டி.பி. விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-3)

## ஷெல் வீச்சில் காலை இழந்த முதியவருக்கு முச்சக்கர வண்டி

தென்மராட்சி,மார்ச்11

கடந்த மே மாதம் சரசாலைப் பகுதியில் இடம்பெற்ற ஷெல் வீச்சில் காலை இழந்த வயோதிபருக்கு யாழ்.ஜெய்ப்பூர் செயற்கைக்கால் தயாரிப்பு நிறுவனத்தினர் முச்சக்கர வண்டியினை வழங்கியுள்ளனர்.

ஷெல் வீச்சில் காயமடைந்த இந்த வயோதிபர் கடந்த பத்து மாதங்களாக மந்திகை ஆஸ்பத்திரியில் கடந்த வெள்ளிக்கிழமை வரை சிகிச்சை பெற்று வந்தார். தற்போது சுகமடைந்துள்ள அவர் முச்சக்கர வண்டியில் மூளாயில் இயங்கும் கைதடி வயோதியர் இல்லத்திற்கு செல்லவுள்ளதாகத் தெரிவித்தார்.

சரசாலை தெற்கைச் சேர்ந்த தம்பிராஜா வாமதேவன் (வயது66) என்பவரே முச்சக்கரவண்டியைப் பெற்றுக்கொண்டவர் ஆவார்.

(க-117)

## இரு இளைஞருக்கு கத்திக் குத்து

தென்மராட்சி,மார்ச்11

ஆலயத்தில் இன்னிசைக் கச்சேரி நடைபெற்ற வேளையில் நடந்த மோதலின் போது நிகழ்ச்சி பார்க்கச் சென்ற இரு இளைஞர்கள் கத்திக் குத்துக்கு இலக்கான சம்பவம் கடந்த வியாழக்கிழமை புலோலி சந்தா தோட்டம் பகுதியில் இடம் பெற்றது.

துன்னாலை மேற்கைச் சேர்ந்த குலவீரசிங்கம் றோகன் (வயது-24), இராசதுரை ஞானபாஸ்கரன் (வயது-23) ஆகிய இளைஞர்களே காயமடைந்த நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (க-117)


# மூன்றாம் ஆண்டு நினைவு தினம்



திருமதி

றொமின் அன்ரனிற்றா ஜோய்வலன்ரைன்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 11-06-1973 | 11-03-1998 |

இறைவனோடு சங்கமித்திருக்கும் எங்கள் அன்புச் செல்வத்தைப் பாசத்தோடு நினைவு கூருகின்றோம்.

- குடும்பத்தினர்.

*புனித ஆசீர்வாதப்பர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(85211)



மனங்கனிந்த உவகையுடன்

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

நேற்று (10-03-2001) சனிக்கிழமை

பொன்விழாக் கண்ட



திருமிகு கந்தையா தேவராஜா

(வணிகத்துறைத் தலைவர், யாழ்.பல்கலைக்கழகம்)

தெய்வீக ஞானத்தால் உயர்ந்து நிற்கும் ஒப்பற்ற தேவன் நீ
கருணை நெஞ்சம் கொண்ட கலங்கரை விளக்கும் நீயே
அள்ள அள்ள வற்றாத அமிர்த ஞானக் கல்விக் கடலும் நீயே
என மனங்கனிந்து வாழ்த்தும்

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
பழைய மாணவர் சங்கம், அபிவிருத்திச் சங்கம்,
யா/இணுவில் இந்துக் கல்லூரி,
**இணுவில் இந்து கல்வி அபிவிருத்தி நம்பிக்கை நிதியம்,**
**இணுவில்.** (85209)



# கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் கமநல சேவைகள் திணைக்கள
உதவி ஆணையாளர்
திரு.க.சுந்தரேசன்
*அவர்களின் அன்பு மாமனார்*
**க.வேலாயுதபிள்ளை**

அவர்கள் அமரத்துவம் அடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கமநல கேந்திர நிலையம்,
தொல்புரம்.

கமநல சேவைக்குழு,
கமநல கேந்திர நிலைய
உத்தியோகத்தர்கள்,
விவசாய சம்மேளனங்கள்.

(85209)



# The Barbara Mulvaney Computer Training Center

123, Temple Road, Jaffna.

புதிய பிரிவுகள் ஆரம்பம்:

- *Diploma In Microsoft Office*
- *Diploma In Desktop Publishing*
- *Diploma In Information Technology*
- *Diploma In Photo Graphics*
- *Diploma In Kids Programming*

Certificate Courses

- *Adobe PageMaker* 6.5 (3 months)
- *Auto CAD* 2000(4months)
- *Microsoft Visual Basic* 6.0 (4 months)
- *Corel DRAW* 9.0 ( 3 months )
- *Microsoft Word* (3 months)
- *Microsoft Excel* (3 months)
- *Microsoft Access* (3 months)
- *Microsoft PowerPoint* (1 1/2 months)

அலுவலக உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள் (இரு பாலாரும்) ஆகியோருக்கான பிரத்தியேக வகுப்புக்கள் அவர்களின் வசதிப்படி வெவ்வேறு பிரிவுகளாக நடைபெறவுள்ளன

மேற்படி வகுப்புக்கள் யாவும் 20-03-2001 அன்று ஆரம்பமாக இருப்பதால் 19-03-2001 இற்கு முன்னர் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

- நிர்வாகம்

(C/15636)

## பாராட்டி மகிழ்கின்றோம்



எமது சக மருந்தாளர்

**திரு.இ.சீ.தேவராசா**

அவர்கள் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக அண்மையில் நியமனம் பெற்றதையிட்டு எமது மனப்பூர்வமான பாராட்டுதலையும், வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

மருந்தாளர்கள்,
யாழ்.போதனா வைத்தியசாலை.

(85069)

## கண்ணீர்ப்பூக்கள்

யாழ்.மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர்

**திரு.க.சுந்தரேசன்** அவர்களின் அன்பு மாமனார்

**கணபதிப்பிள்ளை வேலாயுதபிள்ளை**

அவர்கள் 06.03.2001இல் இறையடி சேர்ந்ததையிட்டுத் துயருறும் அன்னாரின் உறவினர்களுடன் நாமும் துயரத்தைப் பகிர்ந்து கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

புங்குடுதீவு பெருங்காடு வடக்கு
விவசாய சம்மேளனம்,
புங்குடுதீவு.

(85208)

## பாடநூல் விநியோகம்

வடமராட்சி கிழக்கு,மார்ச்11

வடமராட்சி கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்த பாடசாலைகளில் முன்பு கல்வி கற்ற மாணவர்களுக்கான இலவச பாடநூல்களை அப் பாடசாலை அதிபர்கள் தற்போது வழங்கி வருகின்றார்கள்.

இதுவரை இலவசப் பாடநூல்களைப் பெற்றுக்கொள்ளாதவர்கள்; இடம்பெயர்ந்த பாடசாலை இணைக்கப்பட்டு இயங்கிவருகின்ற பாடசாலைகளில் பாடநூல்களைப் பெற்றுக் கொள்ளலாம் என அதிபர்கள் அறிவித்துள்ளனர்.

(க-182)

## கோரிக்கை

வடமராட்சி கிழக்கு,மார்ச்11

தற்போது இயங்காமல் இருக்கும் மருதங்கேணி கிராமிய வைத்தியசாலையை மீண்டும் இயங்கவைக்க நடவடிக்கை எடுக்கும்படி பருத்தித்துறைப் பிரதேச சபைத் தலைவர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் மாகாணப் பிரதிச் சுகாதார சேவைகள் பணிப்பாளரைக் கோரியுள்ளார். (க-182)

## வலி.வடக்கில் சுழற்சிமுறை கடன் உதவி

யாழ்ப்பாணம்,மார்ச்11

வலி.வடக்குப் பிதேச செயலர் பிரிவில் உள்ள மாதர் சங்க உறுப்பினர்கள் 60 பேருக்கு கடந்த வருடம் 4 லட்சத்து 44 ஆயிரம் ரூபா சுழற்சி முறையில் இரு தடைவைகள் சுயதொழில் வாய்ப்புக் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

அகதிகளுக்கான ஐநா. தூதரக நிதியுதவியுடன் பன்னாலை மாதர் சங்க அங்கத்தவர்கள் 30 பேருக்கு 3 லட்சம் ரூபாவும் கோணாப்புலம் முகாமில் வசிக்கும் 30 பேருக்கு ஒரு லட்சத்து 44 ஆயிரம் ரூபாவும் சுயதொழில் வாய்ப்புக் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

சுழற்சி முறையில் மீளப் பெறப்படும் இந்த நிதியைக் கொண்டு ஏனையோருக்கும் கடன் வழங்குவதற்குத் திட்டமிட்டுள்ளதாக வலி. வடக்குப் பிரதேச செயலர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் தெரிவித்துள்ளார்.

(ஐ-6-ரி)

*ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம!*

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



**செல்வி பிருந்தா பத்மநாதன்** அவர்கள்

*(ஆங்கில ஆசிரியை)*

**அன்னை மடியில்:** 12-07-1976 **ஆண்டவனடியில்:** 27-01-2001

பண்பினில் உயர்ந்து நின்று பாசத்திலே மிதந்து நின்று
பாரினில் பதைக்கவிட்டுப் பறந்திட்ட பைங்கிளியே!
எங்கள் அன்புச் செல்வமே! தங்கமாமயிலே!
பாரெல்லாம் தேடியும் உன் பாசமுகம் காணவில்லை?
பூங்காவனமாய்க் காட்சித்த பூங்குயிலே!
திருமணக் காட்சிதனைக் காணுகின்ற வேளையிலே
கண்ணீரைக் குளமாக்கித் தண்ணீரில் போனதேனோ?
மின்னலென மறைந்த உனைத்தேடி, எங்கே காண்போமினி?

*நாளை (12. 03. 2001) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

*'அன்னபவனம்',*
*நீர்வேலி வடக்கு,*
*நீர்வேலி.*

(84919)

*பிரிவால் துயருறும்:*
'அப்பா, அம்மா, பெரியம்மா,
அம்மம்மா, சகோதர சகோதரிகள்,
குடும்பத்தினர்.

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



# அமரர் முத்துத்தம்பி இராசநாயகம் அவர்கள்

**தோற்றம்: 20-10-1938** **மறைவு: 09-02-2001**

**இன் முகத்தான் இன்மொழியான் கேட்டோர்க்கு இல்லையெனா உத்தமனே!**
**இன்முகத்தோடு இனிய விருந்தளிக்கும் கொடையோனே**
**விண் சென்றார் எனக் கேட்ட விசனத்தால் - ஐயா வியப்புற்றோம்.**
**கண் சொட்டும் நீர் கொண்டு காணிக்கை செய்கின்றோம்.**

## உங்கள் ஆத்மா சாந்தியடைய அனுதினமும் இறைஞ்சுகின்றோம்.

*எமது தெய்வத்தின் மரணச் செய்தி கேட்டதும் ஓடோடி வந்து உதவி புரிந்தவர்கள், மரணச் சடங்கில் பங்குகொண்ட உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன் -*

*இன்று (11. 03. 2001) ஞாயிற்றுக்கிழமை இருபாலை வீதி, கோண்டாவிலில் உள்ள எமது இல்லத்தில் இடம்பெறும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்தியங்களில் பங்குகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.*

**- மனைவி, பிள்ளைகள்.**

**இருபாலை வீதி,**
**கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.**

(85721)

# வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய விண்ணப்பித்தவர்களில இம்மாதம் 6 ஆம் திகதிவரையும் அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாக வருமாறு:-

### சங்கானை

(157124ஏ) (171009ஏ) (171118ஏ)
(184303ஏ) (179117ஏ) (179117பி)
(179491ஏ) (179491பி) (183080ஏ)
(183290ஏ) (183290பி) (183372ஏ)
(183372பி) (183396ஏ) (183434ஏ)
(183461ஏ) (183461பி) (183461சி)
(183525ஏ) (184880ஏ) (184957ஏ)
(184982ஏ) (185028ஏ)

### சாவகச்சேரி

(171110ஏ) (179691ஏ) (179691பி)
(184112ஏ) (184113ஏ) (184114ஏ)
(184301ஏ) (184302ஏ) (184321ஏ)
(184325ஏ)

### நெடுந்தீவு

(14579ஏ) (14725ஏ) (14725பி)
(14725சி) (14725டி)

### யாழ்ப்பாணம்

(171442ஏ) (184305ஏ) (184309ஏ)
(150076ஏ) (181748ஏ) (181825ஏ)
(181827ஏ) (181876ஏ) (181885ஏ)
(181885பி) (181885சி) (181885டி)
(181975ஏ) (181975பி) (182024ஏ)
(182024பி) (182162ஏ) (182936ஏ)
(184359ஏ) (184359பி) (184421ஏ)
(184433ஏ) (184438ஏ) (184496ஏ)
(184496பி) (184502ஏ) (184546ஏ)
(184546பி) (184546சி) (184597ஏ)
(184616ஏ) (184621ஏ) (184621பி)
(184630ஏ) (184645ஏ) (184645பி)
(184687ஏ) (184691ஏ) (184691பி)
(184691சி) (184691டி) (184795ஏ)
(184795பி) (184805ஏ) (185870ஏ)
(185924ஏ) (185924பி) (185924சி)
(185924டி) (185938ஏ) (185938பி)
(185938சி) (185951ஏ) (185952ஏ)
(185983ஏ) (185983பி) (185983சி)

### கரவெட்டி

(171109ஏ) (171119ஏ) (171121ஏ)
(184505ஏ) (176209ஏ) (176318ஏ)
(176350ஏ) (176350பி) (176350சி)
(177549ஏ) (177566ஏ) (177599ஏ)
(177599பி) (177654ஏ) (177654பி)
(177657ஏ) (177721ஏ) (177884ஏ)
(180597ஏ) (180598ஏ) (180598பி)
(181062ஏ) (181062பி) (181086ஏ)
(181086பி) (181218ஏ) (181238ஏ)

### ஊர்காவற்றுறை

(14005ஏ) (14005பி) (14386ஏ)
(14629ஏ) (14729ஏ) (14729பி)
(14729சி) (14738ஏ) (14738பி)
(14755ஏ)

### கோப்பாய்

(163739ஏ) (163877ஏ) (163877பி)
(163877சி) (168362ஏ) (173295ஏ)
(177363ஏ) (177363பி) (177363சி)
(177400ஏ) (177400பி) (180749ஏ)
(180749பி) (180749சி) (180753ஏ)
(180753பி) (180753சி) (180758ஏ)
(180758பி) (180810ஏ) (180810பி)
(180821ஏ) (180821பி) (180861ஏ)
(180979ஏ) (180979பி) (180986ஏ)
(180986பி) (180992ஏ) (180993ஏ)
(180994ஏ) (182897ஏ) (182897பி)
(182899ஏ) (182909ஏ) (182924ஏ)
(182924பி) (182945ஏ) (182945பி)
(182945சி) (182945டி) (182945ஈ)
(182985ஏ) (182985பி) (183001ஏ)
(183007ஏ) (183007பி) (183019ஏ)
(183019பி) (183019சி) (184040ஏ)
(184069ஏ) (184092ஏ) (184092பி)
(186335ஏ) (186335பி) (184340ஏ)
(184340பி) (184609ஏ) (184609பி)

### நல்லூர்

(170722ஏ) (170817ஏ) (170951ஏ)
(171023ஏ) (171024ஏ) (171115ஏ)
(171186ஏ) (171297ஏ) (171423ஏ)
(171430ஏ) (171431ஏ) (171434ஏ)
(171435ஏ) (171439ஏ) (171456ஏ)
(171474ஏ) (179620ஏ) (179620பி)
(179645ஏ) (179645பி) (179705ஏ)
(179720ஏ) (179720பி) (184074ஏ)
(184074பி) (184079ஏ) (184125ஏ)
(184125பி) (184304ஏ) (184306ஏ)
(184307ஏ) (172117ஏ) (173739ஏ)
(173739பி) (175455ஏ) (178191ஏ)
(178191பி) (178191சி) (178191டி)
(178455ஏ) (178455பி) (180213ஏ)
(180280ஏ) (181783ஏ) (181783பி)
(181783சி) (181783டி) (181843ஏ)
(181843பி) (181843சி) (181843டி)
(181843ஈ) (181882ஏ) (181883ஏ)
(181968ஏ) (181980ஏ) (181993ஏ)
(181993பி) (181993சி) (182030ஏ)
(182030பி) (182045ஏ) (182130ஏ)
(182130பி) (182130சி) (182130டி)
(182130ஈ) (182159ஏ) (184330ஏ)
(184330பி) (184351ஏ) (184356ஏ)
(184396பி) (184398ஏ) (184428ஏ)
(184455ஏ) (184455பி) (184455சி)
(184455டி) (184490ஏ) (184493ஏ)
(184501ஏ) (184507ஏ) (184508ஏ)
(184508பி) (184508சி) (184508டி)
(184515ஏ) (184520ஏ) (184520பி)
(184520சி) (184520டி) (184544ஏ)
(184558ஏ) (184558பி) (184569ஏ)
(184569பி) (184583ஏ) (184584ஏ)
(184584பி) (184614ஏ) (184614பி)
(184614சி) (184632ஏ) (184632பி)
(184632சி) (184660ஏ) (184660பி)
(184660சி) (184660டி) (184724ஏ)
(184724பி) (184768ஏ) (184768பி)
(184784ஏ) (185636ஏ) (185902ஏ)
(185902பி) (185939ஏ) (185939பி)
(185939சி) (185939டி) (181698ஏ)
(185014ஏ) (185014பி) (185029ஏ)
(185029பி)

### பளை

(174423ஏ)

### பருத்தித்துறை

(158437ஏ) (158437பி) (158437சி)
(160253ஏ) (160253பி) (160253சி)
(160253டி) (165268ஏ) (167445ஏ)
(169786ஏ) (169786பி) (169786சி)
(174231ஏ) (177730ஏ) (177730பி)
(180388ஏ) (180518ஏ) (180587ஏ)
(180600ஏ) (180600பி) (180614ஏ)
(180614பி) (181076ஏ) (181076பி)
(181113ஏ) (181149ஏ) (181153ஏ)
(181170ஏ) (181172ஏ) (181220ஏ)
(181220பி) (181225ஏ) (181225பி)
(181342ஏ) (181342பி) (181342சி)
(161452ஏ)

### சண்டிலிப்பாய்

(171108ஏ) (182742ஏ) (182849ஏ)
(184873ஏ) (184873பி) (184873சி)
(184879ஏ) (184925ஏ) (184925பி)
(184925சி) (184933ஏ)

### தெல்லிப்பழை

(171112ஏ) (171113ஏ) (171114ஏ)
(184308ஏ) (183398ஏ) (183399ஏ)
(183399பி) (183399சி) (183399டி)
(185099ஏ) (185099பி) (185107ஏ)

### உடுவில்

(171111ஏ) (171120ஏ) (179811ஏ)
(179811பி) (184034ஏ) (184034பி)
(184034சி) (184034டி) (184034ஈ)
(184034எவ்) (184098ஏ) (184101ஏ)
(184101பி) (184101சி) (184115ஏ)
(184123ஏ) (184127ஏ) (184151ஏ)
(184154ஏ) (184157ஏ) (184310ஏ)
(178573ஏ) (178573பி) (178573சி)
(179407ஏ) (180318ஏ) (180318பி)
(182751ஏ) (184867ஏ) (184867பி)
(184878ஏ) (185063ஏ) (185064ஏ)
(185104ஏ) (185135ஏ) (185135பி)
(185138ஏ) (185192ஏ) (185192பி)
(185210ஏ) (185210பி) (185303ஏ)
(185303பி) (185312ஏ)

### வேலணை

(14061ஏ) (14061பி) (14614ஏ)
(14645ஏ) (14645பி) (14649ஏ)
(14649பி) (14649சி) (14649டி)
(14693ஏ) (14693பி) (14696ஏ)
(14696பி) (14723ஏ) (14723பி)
(14753ஏ) (க-10)

# பாதுகாப்புக்காக மாதாந்தம் ஒரு கோடி ரூபா செலவாகிறது

## மகளிர் தின நிகழ்வில் ஜனாதிபதி உரை

விடுதலைப்புலிகளின் தாக்குதல்களை முறியடிப்பதற்கும் தற்காப்பு நடவடிக்கைகளுக்கும் மாதாந்தம் ஒரு கோடி ரூபாவை செலவு செய்கிறோம் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

சர்வதேச மகளிர் தினத்தை ஒட்டி ஜனாதிபதி மாளிகையில் இடம் பெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை வருடா வருடம் ஆயுதங்களை கொள்வனவு செய்வதற்காக பல மில்லியன் ரூபாவினை செலவுசெய்து வருகின்றது.

அதேவேளை விடுதலைப்புலிகளின் தாக்குதல்களை முறியடிக்கும தற்காப்பு நடவடிக்கைகளுக்கும் துறைமுகங்களின் பாதுகாப்பு ஒழுங்குகளை மேற்கொள்வதற்கும் மாதா மாதம் ஒரு கோடி ரூபாவினை செலவு செய்கின்றோம்.

ஆகவே வெகு விரைவில் யுத்தத்தினை முற்றாக நிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு எமது அரசாங்கம் விடா முயற்சி எடுத்துக் கொண்டே வருகின்றது.

சமாதானத்திற்காக முயற்சிகள் மேற்கொள்ளப்படும் போது மேலும் பல பிரச்சினைகள் எமக்கு வந்து கொண்டிருக்கும். அந்த பிரச்சினைகளின் சுமையின் ஒரு பகுதியை மக்களே சுமக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. வாழ்க்கைச் செலவு நாளுக்கு நாள் அதிகரித்து அத்தியாவசியப் பொருள்களின் விலையும் வேகமாக அதிகரித்து வருகின்றது. இதனால் பெண்கள் எம்மை நிந்திக்கின்றார்கள். பெண்களின் மேம்பாட்டுக்கென கொண்டுவரப்படும் திட்டங்களை செயற்படுத்தவும் யுத்தமே தடையாக இருக்கிறது.

நாம் இந்த நிலைமைக்கு வரக் காரணம் ஆனையிறவினை புலிகளிடம் எமது பாதுகாப்புப் படை இழந்தமையே ஆகும் சுமார் 90 ஆயிரம் மில்லியன் ரூபா ஆனையிறவினை இழந்தமையினால் எமக்கு நட்டம் ஏற்பட்டுள்ளது. இதனால் தொடர்ந்து அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றம் வங்கி, வட்டி வீதங்கள் வாழ்க்கைச் செலவு அதிகரித்து வருகின்றது - என்று தெரிவித்தார். (ஐ)

## 4 இளைஞர்கள் குறித்து தகவல் இல்லை

தென்மராட்சி,மார்ச்11

வரணி தாவளை இயற்றாளைப் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற சுற்றிவளைப்பின்போது படையினரால் அழைத்துச் செல்லப்பட்ட நான்கு இளைஞர்கள் இதுவரை விடுவிக்கப்படவில்லை.

இதே இடத்தைச் சேர்ந்த தங்கராசா மகேஸ்வரன் (வயது 21), கந்தசாமி ஸ்ரீகாந்தன் (வயது 24), நவரத்தினராசா ஜெயராசா (வயது 24) உட்பட நான்கு இளைஞர்கள் படையினரால் அழைத்துச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இப்பகுதியில் தோட்ட வேலைகள் செய்து கொண்டிருந்த வேளையிலே இந்த இளைஞர்கள் அழைத்துச் செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக இந்தக் இளைஞர்களின் உறவினர்கள் மந்திகையிலுள்ள ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் முறையிட்டிருந்தனர்.(ஐ-117)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மார்ச்.11

யாழ்.மாவட்டத்தில் பதில் கடமையாற்றும் உதவிக் கல்விப் பணிப்பாளர்களுக்கான விசேட கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக தென்மராட்சிக் கல்வி வலய உதவிக கல்விப் பணிப்பாளர் க.குமாரசாமி அறிவித்துள்ளார். (ஐ-3)


## தேவை

தமிழ், ஆங்கில
தட்டெழுத்தாளர் தேவை
*சம்பளம்*
*பேசித் தீர்மானிக்கப்படும்.*

உடுவில், இணுவில், சுன்னாகம், கோண்டாவில் முதலிய பகுதியில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

- தொடர்பு:-
விள.இல.1234,
மே/பா உதயன்.
(85154)


## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 11 - 03 - 70

மறைவு 11 - 03 - 99

### செல்வி சுமதி இராசரத்தினம் (B.A.)

(புவியியல் சிறப்புப் பட்டதாரி)

எங்கும் பிரகாசமான பொருளே!
எமைத் தேடி வந்த சக்தி
பங்கமின்றி பலகலைகள் பயின்றவளே!
இங்கிதமாய் புவியியலைப் புகட்டினாயே மாணவர்க்கு
தங்கள் மகளெனவே பெற்றவர்கள் மகிழ்ந்திருக்க
எங்கள் மகளெனவே வளர்த்தவர்கள் புகழ்ந்திருக்க
இங்கொன்றும் இல்லை என எமக்குணர்த்தி
ஏகிவிட்டாய் எம்மகளே!

*கோப்பாய்.* (85205) - குடும்பத்தினர்.

## 35 ஆம் நாள் நினைவஞ்சலி



செகத்தில் 26 - 02 - 1912

சிவன் கழலில் 05 - 02 - 2001

### அமரர் த.ஆ.சங்கரப்பிள்ளை

(ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்)

தேசிய உடை அணிந்த ஆங்கில ஆசானாய்
மாசிலாக் கல்விப்பணி புரிந்தீர்! மகிழ்வுடன் பல்லாண்டு
கசிந்த எம் திறன்களைக் கங்கை போல்
பெருக வைத்தீர்!
காசினிக்கே மதியுரைக்கும் பொறியியல்
நிபுணன் முதல்மைந்தன்
மூசிகவாகனனுக்குத் தொண்டாற்றி மகிழும் இளைய
மைந்தன் ஊசிவழிச் செல்லும் நூல் போல் நின்
ஆசைமகள்
ஆசிபெற்றனள் ஆங்கிலக் கவியென நீர் அகமகிழ
பேசினிற்கினிய பெருமானின் திருக்கழல்கள்
வாசியாகி நின் ஆன்மா சாந்தியடைகவென
பூசிக்கின்றோம் பக்தியுடன்
பிள்ளைகள் நாம்மூவருமே....

*பத்தாவத்தை, பிரதான வீதி, இளவாலை.*

*மகன் - சந்தானம் குடும்பத்தினர்,*
*மகன் - விமலகாந்தன்,*
*மகள் - நகநந்தினி.* (84744)

## நான்காம் ஆண்டு நினைவில்



மண்ணில் 14 - 02 - 1946

விண்ணில் 23 - 02 - 1997

### அமரர் முத்து நடராஜா

திதி:-11.03.2001

எம்மை உருவாக்கி
உயரவைத்த அன்பு அப்பா!
ஆறவில்லையே எம் துயரம்
நெஞ்சில் நின் நினைவுகள்.
சுமையானவை அல்ல
என்றும் சுகமானவையே!
விழிகளில் நீர்த்துளிகளுடன்
நின் ஆத்மசாந்திக்காய்
இறைவனை வேண்டி நிற்கும்.

மனைவி, பிள்ளைகள்,
மருமகள், பேரப்பிள்ளைகள்.

*பிரதான வீதி, வல்வெட்டி.* (84789)

# சிங்கள மக்களைப் போன்றே தமிழருக்கும் மொழியும் பாரம்பரியமும் முக்கியம்

**கடந்த 7ஆம்திகதி உயர் நீதிமன்ற நீதியரசராகப் பதவி யேற்ற சி.விக்னேஸ்வரன் முதல் அமர்வில் தமிழில் ஆற்றிய உரை இது.**

**இலங்கை வரலாற்றில் உயர் நீதிமன்ற அமர்வில் நீதிபதி ஒருவர் தமிழில் உரையாற்றியது இதுவே முதல் தடவையாகும்.**

சட்டத்துறை தலைமை அதிபதி அவர்களே! எங்கள் இருவரதும் தாய் மொழியில் இத்தருணத்தில் நாம் பேசுவதற்கு காரணம் ஒன்றுண்டு.

### தாய்மொழியில்....

சட்டத்தால் வழங்கப்பட்டுள்ள உரிமையைப் பயன்படுத்தி என் தாய் மொழியில் நான் பேசாது விட்டால், மிக விரைவில் என் சகோதரரின் மொழியில் மட்டுமே நான் பேச வேண்டி இருக்கும். அதற்கு என்ன என்று சிலர் கேட்கக் கூடும்.

நெருக்குதல் மூலமோ, திட்டமிட்ட கட்டாயத்தின் காரணமாகவோ, அதிகார அழுத்தத்தின் பொருட்டோ அவ்வாறு பேசவேண்டி இருப்பின் அதை ஏற்றுக்கொள்ள முடியாது. நாம் ஒவ்வொருவரும் இந்த நாட்டு மக்களே என்பதை மறத்தல் ஆகாது.



சிங்கப்பூரும் இலங்கையும் ஒரே மாதிரியான மொழிப் பிரச்சினையை முன்னர் எதிர்நோக்கின. நான்கு மொழிகளுக்கு சம உரிமை வழங்கியதால் சிங்கப்பூர் முன்னேற்றப் பாதையில் வீறுநடை போடுகிறது.

தனியொரு மொழியை மட்டும் திணித்ததால் நமது நாடு சொல்லொணாத் துன்பத்தில் உழல்கிறது. எங்கள் நாடு துன்பத்தில் ஆழ்ந்திருக்கும் இத் தருணத்தில் உலக நாடுகள் ஒன்று கூடுகின்றன.

### குவலய கிராமம்

உலகம் குவலய கிராமமாக ஒடுங்கி வருகிறது. பல்லின மக்கள் ஒன்று சேருகின்றனர். இலகுவான தொடர்பாடல் மூலம் உலக மொழிகளின் கூடிய பாவிப்பும் இன்றைய உலகில் நடைமுறைக்குச் சாத்தியமாகிவிட்டது.

நான் பிறந்து வளர்ந்த சூழல் என்னை உண்மையான ஒரு இலங்கையனாக ஆக்கி விட்டதென்றால் அது மிகையாகாது. எனது பெற்றோர் வடக்கு-கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள். ஆனால் நான் பிறந்தது மேல்மாகாணத்தில். அதுவும் இந்தப் புதுக்கடையில்தான். நான் ஆரம்பக் கல்வியை வடமேல் மாகாணத்திலும் வட மத்திய மாகாணத்திலும் கற்றேன். எனது தந்தையார் அரசாங்க அலுவலராக மத்திய, தென் மாகாணங்களில் வேலை பார்த்ததால் அம் மாகாண மக்களுடனும் தொடர்புகள் ஏற்பட்டன.

நான் ஊவா மாகாணத்தில் நீதிபதியாகக் கடமையாற்றி இருக்கிறேன். எனது நண்பர்களில் பலர் சப்ரகமுவ மாகாணத்தைச் சேர்ந்தவர்கள். இவற்றால்தான் என்னை இந்த அழகிய தீவின் மைந்தனாகக் கருதுகிறேன்.

இந்த நாட்டின் மைந்தனாக பிற நாடுகளில் நான் இனம் காணப்படும் சந்தர்ப்பங்களில் இறுமாப்படைகின்றேன். இந்த நாட்டின் மூன்று மொழிகளும் நான்கு மதங்களும் எனக்கு வழிகாட்டி இருக்கின்றன. பல் சமய ஒப்பீடு என்பது என் கல்லூரிக் காலத்தில் இருந்தே என்னைக் கவர்ந்திருக்கிறது.

### பௌத்தருக்காக வாதாடியவர்

1965ஆம் ஆண்டில் மல்வத்தை மகாநாயக்க பீட சமயக் குருவை யாழ்ப்பாணத்துக்கு அழைத்துச்சென்ற சர்வ சமய சம்மேளன அங்கத்தவருள் இன்று நிலைத்திருக்கும் மிகச் சிலரில் நானும் ஒருவர்.

எனது தாயாரின் உறவினரான சேர் பொன்னம்பலம் இராமநாதன் தன் உயிரைத் துச்சமென மதித்து சிங்கள பௌத்தர்களுக்கு அனுசரணையாக சென்ற நூற்றாண்டில் பிரித்தானிய ராணியைச் சென்று கண்டு வந்தார். இந்த நாட்டில் நான் எவருக்குமே சளைத்தவன் அல்ல என்ற கருத்தை என் அடிமனதில் ஆணித்தரமாகப் பதிய வைத்து ஆளாக்கிய கல்லூரி றோயல் கல்லூரிதான்.

எனது இனம் சொல்லொணாத் துன்ப துயரங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் கூட என்னை விட்டு இந்தக் கருத்துக்கள் அழிந்துவிடவில்லை.

நான் ஒவ்வொரு மனிதனையும் மதிக்கின்றேன். அவனின் தனித்துவத்துக்கு மதிப்புக் கொடுக்கின்றேன். ஒவ்வொரு மனிதனிலும் ஒளிரும் இறைத் தன்மையை அடையாளம் கண்டு மதிப்புக் கொடுக்கின்றேன்.

## ஒரே மொழியை திணித்ததாலேயே சொல்லொணாத் துன்பம்!

1979ஆம் ஆண்டு தொடக்கம் 1986ஆம் ஆண்டு வரை வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நீதிபதியாக கடமையாற்றியதால் அந்தப் பிரதேச பெரும்பான்மை மக்களின் உணர்வுகளையும், ஆர்வங்களையும் புரிந்து கொள்வதற்குரிய ஒரு சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது.

### உரிமைகளையே விரும்புகிறார்கள்

அங்கிருக்கும்போது நான் அறிந்து கொண்டது என்னவென்றால் அந்தப் பகுதி மக்கள் அதிகாரப் பகிர்வையோ பொறுப்புப் பகிர்வையோ மட்டும் எதிர்பார்க்கவில்லை. தமக்கென இருந்த அனைத்து உரிமைகளையும் திரும்பப் பெறவே ஆசைப் படுகின்றார்கள். அவர்கள் உரிமைகள் அனைத்தும் 'கணிதமுறை' நடவடிக்கை மூலம் பறிக்கப்பட்டுள்ள தாகவே எண்ணுகின்றார்கள். அதாவது இரு மாகாணங்களில் இருந்த பெரும்பான்மை மக்களை ஏழு மாகாணங்களிலிருந்த பெரும்பான்மை மக்களுடன் சேர்த்துக் கூட்டி, ஒன்பது மாகாணங்களிலும் தம்மைச் சிறுபான்மையினராக அரசு கணிப்பீடு செய்துள்ளதாக கவலைப் படுகின்றார்கள்.

இந்த நிலையை மாற்றி அமைப்பதற்காக 1958இலும் 1966இலும் முன் வைக்கப்பட்ட நியாயமான தமிழ மொழிப் பிரயோக சட்டப் பிரேரணைகள் எதிர்ப்புக்களின் மத்தியில் கைவிடப்பட்டதால் ஆதங்கப்படுகின்றார்கள்.

### பெரும்பான்மை தமிழர்கள்

சுதந்திரம் கிடைக்கும்வரையில் வடக்கு - கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்களில் பெரும்பான்மையானவர்கள் தமிழ்மொழி பேசுபவர்களாகவே இருந்தார்கள். மதத்தால் இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம் என வேறுபட்டாலும் மொழியால் ஒன்றுபட்டிருந்தார்கள்.

இவர்களது கலை, கலாசார பழக்க வழக்கங்கள், நாட்டின் சூழ்நிலைகளுக்கேற்ப வாழ்ந்த வாழ்க்கைமுறைமை யாவும் தொடர்ந்து பாதுகாக்கப்பட்டு சுயமாக வளர்ச்சி அடையவிடப்பட்டிருக்க வேண்டும். மத்திய மாகாணத்தின் ஒருசில இடங்களிலும் இவ்வாறே அனுசரித்து நடந்திருக்க வேண்டும். ஆனால பதவிக்கு வந்த அரசாங்கங்கள் அவ்வாறு செயற்படாது விட்டதனாலேயே இன்று இந்த நிலைமைக்கு நாடு வநதுள்ளது.

தமிழ்மொழி பேசுவோரின் தொகை படிப்படியாக சகல அரசாங்க, நீதித் துறை, சட்டத்துறை உட்பட அரச

## நீதியரசர் விக்னேஸ்வரனின் முக்கியத்துவம் மிக்க பதவியேற்பு உரை

துறை நிறுவனங்களிலும், தனியார் துறை நிறுவனங்களிலும் குறைந்து வருகின்றது.

பறங்கியர் போன்று காலக் கிரமத்தில் தமிழர்களும் இருந்த இடம் தெரியாது மறைந்து போய் விடுவரோ என்று நாம் யோசிக்க வேண்டி இருக்கின்றது.

1962 ஆம் ஆண்டில் இலங்கை சட்டக்கல்லூரி சங்கத் தலைவராக நான் கடமையாற்றினேன். அதன்பின்னர் இன்றுவரை தமிழ் பேசும் ஒருவர் அந்தச் சங்கத்திற்கு தலைவராகத் தெரிவு செய்யப்படவில்லை என்பது காலத்தின் கோலமாகும்.

இந்த நாட்டை நான் நேசிப்பதாலும இந்த நாட்டின் நலன் கருதி வருங்கால முன்னேற்றம் கருதி, ஒன்றைக் கூற விரும்புகின்றேன். இது என் பொருட்டோ, என் இனத்தவர்கள் பொருட்டோ கூறப்படும் ஒன்றல்ல.

### பாரம்பரியம் முக்கியம்

இப்படியானதொரு சந்தர்ப்பம் எனக்கு இனிக் கிடைக்குமோ தெரியாது. அதாவது, சிங்கள மக்களுக்கு அவர்களின் மொழியும், பாரம்பரியமும், எவ்வளவு முக்கியமோ இந்த நாட்டில் வாழும் தமிழ் பேசும் மக்களுக்கும் அவர்களின் மொழியும் பாரம்பரியமும் முக்கியத்துவமானவை என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்.

தமிழ்மொழியை வேறு நாடுகளில வளர்க்கிறார்களா? பேணுகிறார்களா? என்பது முக்கியமல்ல. எங்களுக்கே உரித்தான முறையில் அம்மொழியையும், பாரம்பரியத்தையும் பேணி வளர்க்கவே இந்நாட்டுத் தமிழர்கள் ஆசைப் படுகிறார்கள்.

சிங்கள மொழி ஏழு மாகாணங்களில் ஆட்சி மொழியாக அதிகாரம் செலுத்தும் அதேவேளையில், வடக்கு கிழக்கு மாகாணத்தில் தமிழ்மொழியே ஆட்சி மொழியாக அதிகாரம் செலுத்த வேண்டும். ஆங்கில மொழியை இரு சம உரிமை கொண்டவர்களுக்கிடையிலான இணைப்பு மொழியாக பயன படுத்தலாம்.

அவ்வாறு வடக்கு-கிழக்கு மாகாண தமிழர்களுக்கும் தமிழுக்கும் பிரத்தியேக உரிமைகள் வழங்கப்படாதவிடத்து 1956 இல் இயற்றப்பட்ட தனிச் சிங்களச் சட்டத்தால் ஏற்பட்ட பிழை திருத்தப்படாமல் போய்விடும்.

1947ஆம் ஆண்டின் அரசியல் யாப்பில் இருந்த பிரிவு 29 (2)போன்ற சரத்துக்கள் பின்னைய அரசியலமைப்புகளில் சேர்த்துக் கொள்ளாது விடப்பட்டதன் தாக்கம், குறைக்கப்படாது போய்விடும்.

1958 ஆம், 77 ஆம், 83 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற கலவரங்களால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் உணர்வுகள் சாந்தி அடையாது போய்விடும்.

தற்போதைய அரசியலமைப்புகளில் காணப்படும் அலங்கார ஏற்பாடுகளும் வசனங்களும், வடக்கு-கிழக்கு மாகாணத் தமிழர்களுக்கு வாழ்வளிப்பதாகத் தெரியவில்லை.

ஒவ்வொரு தமிழனும் வெளியார்களது தலையீடுகள் இன்றி தாய மொழியிலேயே தனது கருமங்களைச் செய்ய விரும்புகின்றான் - ஆசைப்படுகின்றான்.

★

# வவுனியாவில் அதிகரிக்கும் தற்கொலைகள் தொடரும் போரினால் விபரீத நிலைமை

உலகில் தற்கொலையில் முன்னணி வகிக்கும் நாடு என்ற துரதிஷ்டவசமான பெயர் ஹங்கேரிக்கு உண்டு. இரண்டாவது இடத்தில் இலங்கை உள்ளது. விரைவில் ஹங்கேரியின் இடத்துக்கு இலங்கை வந்துவிடும் என்று அஞ்சப்படுகிறது. அந்த அளவுக்குத் தற்கொலைகளும், தற்கொலை முயற்சிகளும் வேகமாக அதிகரித்து வருகின்றன.

விவசாய மாவட்டங்களான பொலநறுவை, அநுராதபுரம், மட்டக்களப்பு, வவுனியா ஆகியவற்றில் தற்கொலைகளும், அதற்கான முயற்சிகளும் முந்திய ஆண்டுகளை விட கடந்த ஆண்டு கூடியுள்ளன.

இவற்றில் வவுனியா மாவட்டத்தில் வவுனியா மாவட்ட சுகாதார மருத்துவ அதிகாரி டாக்டர் ஏ.கேதீஸ்வரன், நெலுக்குளம் பொதுசுகாதார அதிகாரி கே.மேரியா ஆகியோர் இணைந்து நடத்திய தற்கொலை மற்றும் அதற்கான முயற்சிகள் குறித்து மேற்கொண்ட ஆய்வுகள் நிலைமையின் விபரீதத்தை உணர்த்துகின்றன.

தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு, வவுனியா மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவர்கள் மற்றும் சிகிச்சை பலனளிக்காமல் அங்கு இறந்தவர்கள் பற்றிய ஆவணப் பதிவுகளை வைத்து அவர்கள் ஆய்வுகளை மேற்கொண்டனர்.

அவர்கள் மேற்கொண்ட ஆய்வுகளில் இருந்து விபரீதமான விடயம் ஒன்று கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படாமல் இருப்பது தெரியவருகிறது.

### 470 பேர் தற்கொலை முயற்சி

கடந்த ஆண்டு 11 - 40 வயதுகளுக்கிடைப்பட்ட 470 பேர் முயற்சிகளில் ஈடுபட்டு வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த எண்ணிக்கை 1999ஆம் ஆண்



டைவிட 31 வீதம் அதிகமானது.

இதைவிட மற்றொரு விடயம் நெஞ்சைத் துணுக்குற வைக்கிறது. கவலைகள் அற்றுக் களித்திருக்கும் வயதினர் என்று நாம் நம்பிவரும் 10 வயதுக்குட்பட்ட சின்னஞ் சிறுசுகளில் 79 மழலைகள் கடந்த ஆண்டு தற்கொலை செய்ய முயற்சித்து, காப்பாற்றப்பட்டு வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட விடயமே அதுவாகும். ஆய்வுகளில் இருந்து தெரியவந்துள்ள மேலும் சில முடிவுகள்:-

☆ 99ஆம் ஆண்டு முதல் 8 மாதங்களில் 311 பேர் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டனர். அதுவே 2000ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் 407ஆக உயர்ந்தது. இது 31 வீத அதிகரிப்பாகும்.

☆ தற்கொலை செய்ய முயற்சிப்பவர்களில் பெரும்பாலோனோர் பூச்சி கொல்லிகள், அலரி விதைகள் போன்ற நச்சுப் பொருள்களை உட்கொள்கின்றனர்.

☆ 21 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்டவர்களே பெரும்பாலும் தற்கொலைக்கு முயற்சிக்கின்றனர்.

☆ இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியிருப்பவர்களே தற்கொலைக்கு முயற்சிக்கிறார்கள்.

☆ வவுனியா மாவட்டத்திலுள்ள 7 நலன்புரி நிலையங்களில் சனச, நெலுக்குளம், பூந்தோட்டம், வேப்பங்குளம் ஆகிய நாலு நிலையங்களில் தங்கியுள்ளவர்களிடையே தற்கொலை மனப்பாங்கு அதிகம் நிலவுகிறது.

☆ ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டவர்களின் எண்ணிக்கை மற்றைய மாதங்களைவிட கணிசமான அளவு அதிகரித்துக் காணப்படுகிறது.

ஆய்வுகள் மூலம் அறியவந்துள்ள மேற்கண்ட முடிவுகள்

### வருடா வருடம் அதிகரிப்பு

வவுனியா மாவட்டத்தில் தற்கொலை மற்றும் அதற்கான முயற்சிகளில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கைகள் வருடாவருடம் அதிகரித்து வருவதை சந்தேகத்துக்கிடமின்றி சுட்டிக் காட்டுகின்றன.

ஆய்வுகளை மேற்கொண்ட இரு அதிகாரிகளும் தற்கொலை மனோபாவத்தை உருவாக்கும் காரணிகளாக, தொடரும் போரினால் ஏற்பட்டுள்ள வறுமை, இடப்பெயர்வுகள் இவற்றால் தோன்றும் மன அழுத்தங்கள் ஆகியவற்றை குறிப்பிடுகிறார்கள்.

அத்துடன், ஆய்வு முடிவுகள் காட்டுவதைவிட உண்மைநிலை பல மடங்கு மோசமடைந்துள்ளதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

ஏனென்றால் தற்கொலை முயற்சிகளில் ஈடுபட்டு காப்பாற்றப்பட்டு வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்கள் மற்றும் அங்கு உயிரிழந்தோர் மட்டுமே ஆய்வுகளில் கணக்கில் எடுக்கப்பட்டனர்.

வவுனியா மருத்துவமனையில் இருந்து அநுராதபுரம் அல்லது கொழும்பு மருத்துவமனைகளுக்கு மேலதிக சிகிச்சைகளுக்காக அனுப்பட்டவர்கள் மற்றும் அங்கு உயிரிழந்தவர்களும் கணக்கில் எடுக்கப்படவில்லை.

மேலும் கணிசமான தற்கொலைகள் அல்லது தற்கொலை முயற்சிகள் சமுதாயத்தால் சம்பந்தப்பட்ட பகுதிக்குள் மறைக்கப்பட்டு விடுகின்றன.

தற்கொலை செய்துகொண்டவர்கள் உயிரிழந்துவிட்டது சந்தேகத்துக்கிடமின்றி தெரிந்தபின்னர் சடலங்கள் மருத்துவ மனைக்கு கொண்டு செல்லப்படுவதில்லை. அதனால் அத்தகைய இறப்புகளும் ஆய்வுக்குள் அகப்படவில்லை.

இத்தகைய நிலையில் ஆய்வுகளின் மூலம் தெரிய வருபவற்றை விட வவுனியா மாவட்டத்தில் தற்கொலை மனோபாவம் அதி பயங்கரமான வேகத்தில் கூடி வருகிறது என்பதே உண்மையாகும்.

தற்கொலை முயற்சிகளில் ஈடுபடுபவர்கள் தகுந்த சமயத்தில் காப்பாற்றப்படக் கூடிய சந்தர்ப்பங்கள் அமைந்தபோதும் கூட, வவுனியா மாவட்டத்தில் நிலவும் மருத்துவ வசதிக் குறைபாடுகளால் அவர்களில் பலர் இறந்துபோக நேரிடுவது ஜீரணிக்க முடியாத பெரும் சோகமே.

### சில யோசனைகள்

வவுனியாவை அச்சுறுத்தும் தற்கொலை அபாயத்திலிருந்து விடுபட ஆய்வுகளை மேற்கொண்ட அதிகாரிகள் தந்துள்ள சில யோசனைகள் வருமாறு:-

☆ மன அழுத்தங்களில் இருந்து விடுபட நம்பகமான - ஆறுதல் அளிக்கும் - ஆலோசனைகளைப் பெற வசதிகளை ஏற்படுத்துதல்,

☆ வேலையில்லாத் திண்டாட்டத்தை முடிந்தவரை ஒழித்தல்,

(1?ஆம் பக்கம் பார்க்க)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## வீடு விற்பனைக்கு

இல.148, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணையில் கடையுடன் சேர்ந்து அமைந்துள்ள மாடிவீடு விற்பனைக்கு உண்டு. திரு.திருமதி இராஜதுரை. தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இல: 075-331064 (C/15566)

## விற்பனைக்கு

பத்து மாத சினையுடன் கறவைப் பசு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: **S**.திருச்செல்வம், **57/30,** ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (85233)

ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் தகட்டில் தயாரிக்கப்பட்ட புதிய டீப் பிறீஸர் **(DEEP FREEZER)** விற்பனைக்குண்டு. தொடர்பு முகவரி: இல.10, முதலாம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (85120)

குளிர்சாதன **DAN FOSS Tecum,** கொம்பிறசர்கள், தேமோஸ்டட், செப்புக் குழாய்கள், கொண்டென்சர்கள், **FAN** கள், ஒட்டுக்கம்பிகள், பில்டர்கள், பிரியோன் **GAS** என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: **SAI RAM, 101, PALALY ROAD, JAFFNA.** (85122)

**Yamaha - CD-70, Select II Scooter, Acma Fridge, Singer** தையல் மெசின் என்பன உடன் விற்பனைக்கு உண்டு. விவரம்: **32/4,** பலாலி வீதி, உரும்பிராய். **(T.P.No: 2168)** (85161)

## ஸ்கூட்டர் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 84 ஸ்ரீ இத்தாலி வெஸ்பா ஸ்கூட்டர் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 118, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (85232)

## மணமகன் தேவை

யாழ்.கிறிஸ்தவ (26 வயது நிரம்பிய) கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 5 வருடங்களாக ஆசிரியையாகப் பணியாற்றும் அழகான மணமகளுக்கு மண மகன் தேவை. உத்தியோகத்தில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. தொடர்பு: விள.இல.1235, மே/பா. உதயன். (85188)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

இறைச்சிக்கோழி (புறொயிலர், கல்பேட்ஸ்) தினமும் சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), நல்லூர். (85114)

## காணி விற்பனைக்கு

சண்டிலிப்பாயில் 8 பரப்பு பனங்காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: செ.சுதாகரன், 40/3, புகையிரதக் கிழக்கு ஒழுங்கை, கந்தர்மடம் அல்லது திரு.மது, டச் வீதி, சண்டிலிப்பாய். (85141)

## தவறிவிட்டது

கரவெட்டியைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் சின்னையா என்பவரது விசேட அ.அ.(இல.0909028870) கடந்த 05.03.2001 அன்று யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறைக்கு வரும்பொழுது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து நெல்லியடி மொடேர்ன் புத்தக நிலையத்தில் ஒப்படைத்துதவவும். (85199)

மட்டுவில் நாடு, பூநகரி என்ற முகவரியிடப் பெற்ற ஐயாத்துரை மகேஸ்வரி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.287490690V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மருதனார்மடச் சந்தியில் உள்ள பிள்ளையார் ஸ்ரோர்ஸ் அல்லது உடுவில் தெற்கு கண்ணன் கடையில் ஒப்படைத்து உதவவும். (85236)

## ஸ்ரீராகவேந்த்ர ஜோதிடம்

கனடா, சுவிஸ், லண்டன், சிங்கப்பூர் ஆண்கள் உள்ளனர். மற்றும் சகல இனத்தவர்கள் **G.C.E O/L** முதல் டாக்டர், என்ஜினியர் வரை படித்த 1960 முதல். 1980 வரையிலான சைவ, அசைவ ஜாதகங்கள் உள்ளன. ஜாதகப் பரிசீலனை நாமே மற்றும் செவ்வாய் தோஷ நிவர்த்தியும் செய்யப்படும். தொடர்பு: ராகவேந்த்ர ஆலயம், நல்லூர். (85184)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

இறைச்சிக்கோழிகள் புறொயிலர் **(BROILERS)** விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (85227)

புறொயிலர், கல்பேட் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்தல் இலவசம். லவ்பேட்ஸ் (மஞ்சள், வெள்ளை, நீலம், பச்சை) விற்பனைக்கு உண்டு. 31, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம். (கண்ணா வீடியோ சென்ரர் வளவு) (85245)

## தேவை

சிறிய குடும்பம் ஒன்றுக்கு. நன்கு சமையல் தெரிந்த வீட்டுப் பணிப்பெண் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம். தொடர்பு: விளம்பர இல. 1232, மே/பா உதயன். (85024)

## கணக்காளர் தேவை

யாழ்.நகரில் உள்ள நிறுவனம் ஒன்றுக்கு கணக்காளர் தேவை. பகுதி நேரமாகவும் பணி புரியலாம்.

தொடர்பு:
விள.இல.1237,
மே/பா உதயன் (85229)

## பூனை விளக்கை தட்டியதால் விபரீதம்

தென்மராட்சி,மார்ச்11

மேசையில் வைக்கப்பட்டிருந்த போத்தல் விளக்கினை பூனை தட்டி வீழ்த்தியதால் மேசையின் கீழ் படுத்திருந்தவர் எரிகாயங்களுக்கு இலக்கான சம்பவம் கடந்த புதன் கிழமை இரவு இடம்பெற்றது.

பருத்தித்துறை முதலாம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த தியாகராசா அரசரத்தினம் (வயது 42) என்பவரே முகத்தில் எரிகாயங்களுக்கு இலக்கான நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (க-117)

## ஓய்வூதியக் கொடுப்பனவு ஏப்ரல் 5 இல்

தென்மராட்சி,மார்ச்11

சித்திரைப் புத்தாண்டையொட்டி ஓய்வூதியர்களுக்கான ஏப்ரல் மாத ஓய்வூதியக் கொடுப்பனவு ஓய்வூதியத் தினத்திற்கு முன்கூட்டியே வழங்குமாறு கொழும்பு ஓய்வூதியத் திணைக்களப் பணிப்பாளர் ஓய்வூதியம் வழங்கும் நிறுவனங்களுக்கு அறிவித்துள்ளார்.

ஏப்ரல் மாத ஓய்வூதியம் பத்தாம் திகதி வழங்கப்படும் என்று முன்னர் அறிவிக்கப்பட்ட போதிலும் ஏப்ரல் ஐந்தாம் திகதி கொடுப்பனவை வழங்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஹஜ் பெருநாளையொட்டி மார்ச் மாத ஓய்வூதியக் கொடுப்பனவும் முன்கூட்டியே வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-117)

## வவுனியாவில்...

(9 ஆம் பக்கத் தொடர்ச்சி)

☆ விளையாட்டுகள் மற்றும் பொழுதுபோக்குகளை கிராமங்களில் குறிப்பாக நலன்புரி நிலையங்களில் ஊக்குவித்து வளர்த்தல்.

☆ சிரமதானங்கள் போன்ற செயற்றிட்டங்கள் மூலம் அலரி போன்ற நச்சு மரங்களை அழித்தல்,

☆ மலத்தியோன் போன்ற பூச்சி நாசினிகள் பொது மக்களுக்கு இலகுவில் கிடைக்காதவாறு கட்டுப்படுத்துதல்.

☆ இவை எல்லாவற்றிலும் மேலாக உடனடி நடவடிக்கையாக-தற்கொலை முயற்சியில் ஈடுபடுபவர்களைக் காப்பாற்றும் மருத்துவ வசதிகளை மேம்படுத்தி பரவலாக்குதல்.

இந்த யோசனைகள் வவுனியாவில் மட்டுமல்லாது நாடளாவிய அளவில் அதிக சிரத்தையுடன் மேற்கொள்ளப்பட வேண்டியவை.

ஏனென்றால் நாடு முழுவதையும் தன் கோரப்பிடிக்குள் நசுக்கும் தற்கொலைப்பேயை ஒழித்துக்கட்ட இனியும் காலம் தாழ்த்த முடியாது; காலம் தாழ்த்தவும் கூடாது.

# 41ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அன்னை அரவணைப்பில்
22 - 07 - 1959

ஆண்டவன் அடியில்
30 - 01 - 2001

## அமரர் வல்லிபுரம் சிவானந்தன்

(வரணியூர் சிவா)

குடும்பம் காக்கும் தலைமகனாகி
அன்புக்கோர் அண்ணனாகி
நலம் நல்கும் மணாளனாகி
நல்லறிவு கூறும் தந்தையாகி
மன்னுயிரை நேசிக்கும் பண்பாளனாகி
உற்றார்க்கு உதவி செய்யும் உறவினனாகி
ஊர் உலகம் போற்றும் பாடகனாகி - இருந்து
நீர் எம்மை விட்டு எங்கு சென்றீரோ?
நோயுற்ற வேளையிலே எமை எதிர்பார்த்திருந்துவிட்டு
நாம் வந்த வேளையிலே எங்கே நீர் சென்றீரையா?
பாவிகள் நாம் பரிதவிக்கிறோம்!
மாறுமோ இத்துயரம்? மறக்குமோ உம் நினைவு?
எம் நாடி நரம்பெல்லாம் நிறைந்திருக்கும் உம் உருவம்!

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அமரர் வல்லிபுரம் சிவானந்தன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (11.03.2001) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நிரந்தர முகவரி:
*பருத்தித்துறை வீதி,*
*கொடிகாமம்.*

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்
(குடும்பத்தினர்)

(85234)

---

பொன்விழாக் கண்ட நாயகனை

# வாழ்த்துகின்றோம்



## திரு.க.தேவராஜா அவர்கள்

(தலைவர், வணிகத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

என்றும் இனிதே வாழ்க!

பட்டப்படிப்புகள் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

விரிவுரையாளர்கள்,
இயக்குநர்,
மாணவர்கள்.

(85228)

# நன்றி நவிலல்

## அமரர் V.T. கந்தசாமி B.Sc.(Hons)

(இளைப்பாறிய ஆசிரியர் **VTK**)

அன்னார் நோயுற்று இருந்த வேளையில் பல்வேறு உதவிகளை வழங்கி யாழ். போதனா வைத்தியசாலை, தெல்லிப்பழை வைத்தியசாலை வைத்தியர்கள், தாதிமார்கள் மற்றும் ஏனைய ஊழியர்களுக்கும் 04-03-2001 அன்று அவரது மரணச் செய்தியை அறிந்து விரைந்து வந்தவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், இறுதிக்கிரியைகளின்போது வந்து கலந்து கண்ணீர் அஞ்சலிகள், மலர் வளையங்கள், மலர் மாலைகள் சூட்டி அஞ்சலி உரைகளும் நிகழ்த்திய எமது உற்றார், உறவினர், நண்பர்கள், ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் ஆகிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

\- குடும்பத்தினர்.

தகவல்:
க.பிரதீபன்
*அரச வீதி, உரும்பிராய்.*

(85231)

## விண்ணக வாழ்வின்

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

11.03.2001



அன்னை மடியில்
06 - 02 - 1965

ஆண்டவன் அடியில்
09 - 02 - 2001

## செல்வி பெனிக்னா ரஜனி பிரான்சிஸ்பிள்ளை

எமதன்புச் செல்வ மகளே!
கொடிய நோய் வடிவில் மரணம் வந்து
உனை வதைத்து
நித்திய வாழ்விற்கு உனை அழைக்க
எமைக் கலங்க விட்டுப் போக சம்மதித்தாயா?
றஜாம்மா உன்னைப் பெற்றவள் தினம் கதற
அண்ணன்மாரை ஏமாந்து நிற்க விட்டு
அன்னையைப் போல் வளர்த்தெடுத்த ஆசை அக்காவும்
அருமைத் தம்பியனும் உன் ஆசை முகம் காணாது
அந்நிய தேசமதில் அங்கலாய்க்க
அருகிருந்த சகோதரிமார் கலங்கித் தவிக்க
அன்னைக்கும் மேலாய் உனைத் தாங்கிச் சேவை செய்த
உன் அண்ணியம்மா என்நேரமும் உன் நாமம் ஜெபிக்க
சின்ன அண்ணியோ துடிக்கின்றாளே!
தந்தையைப் போல் அன்பைப் பொழிந்த அத்தான் உன்
இழப்பை ஏற்க மறுக்க, மற்றவரோ நீ இறைவன்
பாதமதில் இருக்கின்றாய் என்று கூற, அருகிருந்தவரோ
எதுவும் கூற மறுக்கின்றாரே!
றஜாம்மா உன் அன்புச் செல்வங்களோ சித்தி எங்கே?
அத்தை எங்கே? எப்போ வருவாய் எனக் காத்து நிற்க!
நீயோ இந்த மாய உலக வாழ்வை விட்டு மகிமையில்
யேசுவைத் தரிசிக்க நித்திய வாழ்வைத் தேடி இறைவன்
சந்நிதானம் சென்று விட்டாயா?
ஆறாத தீராத வேதனையுடன் உன் ஆத்ம சாந்தி
வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

\- குடும்பத்தினர்.

*நாவலர் பாடசாலை ஒழுங்கை,*
*கோப்பாய் மத்தி.*

(85224)

# இந்த வார ****** இராசி பலன் ******

# 11-03-2001 - 17-03-2001

| | | | |
|---|---|---|---|
| கு ▲ வெ | சனி | வி | ராகு |
| புத | இராசிச் சக்கரம் | | |
| | | | |
| கே | செ | | சந் |

**மாற்றம்:-**

*11-03-2001 இல் அத்தம் நட்சத்திரம் கன்னி இராசியில் சந்திரன் நிற்கும்.*

அரசியல் பேச்சில் அபிப்பிராய பேதங்கள், நிர்ப்பந்தங்கள் வர இடமுண்டு. விட்டுக்கொடுத்து நடக்கவேண்டும் என்ற நிலைவரலாம், இந்தியா புதிய அழுத்தங்களைப் பிரயோகிக்கும். இந்திய அரசியல்வாதிகள் இடையே அபிப்பிராய பேதங்கள் வரலாம். பல புதிய தொழில்நுட்பச் சிறப்பு மாற்றங்கள் ஏற்படும். அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் இலங்கை இனப்பிரச்சனையிலும் மத்திய கிழக்கு நாடுகளின் நெருக்கடிகளிலும் கிழக்கு நாடுகளின் பொருளாதாரத்திலும் புதிய அழுத்தங்களைப் பிரயோகிக்கும் எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.

## மேடம்

கொள்ளிவைக்கப் பிள்ளை இங்கு இல்லை. தள்ளி நின்றவர்கள் மெல்ல மெல்ல வந்து பொருளை அளிள்ப் போக வருகிறார்கள் — பாடையில் போகையிக்கே பத்திரிகையில் முழுப்பக்கத்தில் விளம்பரம் இது இன்று இங்கே தமிழ் மக்கள் நிலை — எனவே பொருளில்அவதானம்.தொழிலில் சிந்தனை கொண்டு செயற்படுங்கள். அதனால் பொருள்வரவு வாக்குச் சாதுரியம் மிகும். சமூகத்தில் செல்வாக்கு, சொல்வாக்கால் பல அறிமுகங்கள் ஏற்படும். தாய் வழியினருடன் மனக்கருத்து ஏற்படலாம். அழகிற்கும், அழகுபடுத்துவதற்கும் பொருள்செலவு செய்வீர்கள். சகோதர உதவிகள் கிடைக்கும். பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளவும். கைகால்வலி, சளி, கிருமி தாக்கம், தோல், உஷ்ண பீடைகள் வர இடமுண்டு. அரசியல்துறை, கழிவுப் பொருள் விற்பனை, எண்ணெய் வியாபாரம், கமிஷன் போன்ற தொழிற்களால் நல்ல இலாபங்கள் அடைய இடமுண்டு.

★ அதிர்ஷ்ட நாள்கள்;— திங்கள், புதன், வியாழன்.

## இடபம்

காகம் கரைந்தது. பல்லி சொல்லியது. பலன்பார்க்க நேரமில்லை. காலையில் பத்திரிகையை பிளேன்ரீ குடித்துப் பார்த்துவிட்டு வேலைக்கு ஓடவேண்டிய காலமாகும். உழைப்புக்குமேல் குடும்பச் செலவு; சமாளிக்க முடியாத நிலை மக்களுக்கு. எனவே கடுமையான உழைப்பு உங்களுக்குத் தேவையாகும். வீடுமாறிப்போக ஓர் எண்ணம் உண்டு. மாறாமல் இருப்பது நன்று. வார்த்தைகளை அளந்து பேசுங்கள். உங்கள் மூச்சு கூட அயலவரை யோசிக்கச் செய்யும் காலமாகும். எதிர்ப்பாலார் நல்லதைச் செய்வதாகச் சொல்லமாட்டார்கள். குடும்பத்தினருக்காக அதிகம் ஓடியாடித் திரிவீர்கள். சகோதர உதவிகள் கிடைக்கும் நெஞ்சுநோ, தொண்டை வருத்தம், சலரோகங்கள், விறைப்பு போன்ற வருத்தங்கள் வரும் தூரதேசச் செய்திகள் வரும். மருந்துத்துறை.சட்டத்துறை, தோட்டத்துறை, ரீவி வீடியோதுறை, கொம்பியூட்டர்துறை, இசைத்துறை, படத்துறைபோன்ற துறையைச் சேர்ந்தவர்கள் அதிக இலாபங்கள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள் கள்: — புதன், வியாழன்.

## மிதுனம்

மனிதர்கள் புதிது புதிதாகத் திட்டமிடுகின்றார்கள். ஆனால் தெய்வம் கிரகங்கள் மூலம் ஏற்கனவே திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்த சட்டமாகப் போடப்பட்ட குறிப்புகளை சோதிடர்கள் குறித்து மக்களுக்காகப் பார்க்கிறார்கள். தற்காலக் கிரக நிலைகளை அனுசரித்துப் பலன் சொல்லுகிறார்கள். சொல்லட்டுமே என எண்ணுகிறீர்களா? தொழிற் பீடங்களிலும் நிதானமாக சட்டதிட்டப்படி, பலனின் விதியின் போக்குப்படி செயல்பட்டு வருவீர்கள். குடும்பத்திலும் — சகோதரங்களுடனும் வாக்குக் கலகங்கள் ஏற்படும். இட மாற்றங்களைத் தவிருங்கள். முதுகுவலி, நாரிவலி, உஷ்ணபீடை மலச்சிக்கல், வாய்வுத்தொல்லை என்பன ஏற்பட இடமுண்டு அவசரப்படாது நிதானமாகச் செயற்பட்டு எதிலும் வெற்றி அடைய முயலுங்கள். குருத்துறை, சட்டத்துறை, கோவில்துறை போன்றதுறையைச் சார்ந்தவர்கள் நன்மைகள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள் கள்: - புதன், வியாழன்.

## கடகம்

துன்பங்களை யார் தாங்குவது? நீங்கள்தான் தாங்கிக் கொள்ளுவது. சமைப்பவர்களுக்குச் சோறு இல்லை. சமையாதவர்கள் சாப்பிடத் தயாராகிறார்கள். இதுதான் இன்றைய உலகம். எனவே தொழில் ஸ்தானத்தில் உங்கள் செயற்பாடுகளால் வரும் பலனை மற்றவர்கள் அடைய முயல்வார்கள். பழைய பாக்கிகள் வரவு பற்றிய பேச்சுக்கள் எழலாம். குடும்பத்தில் கருத்து வேற்றுமை எழலாம். இடமாற்றங்கள் நன்மைகள் தரும் காலமாகும். சகோதரங்கள் உதவிகள் செய்வார்கள். அந்நிய நண்பர்களின் பழக்கங்கள் ஏற்படும். வீடு, வாகன யோகங்கள் கொடுக்கும். இடமாற்றங்கள் நன்மை தந்தாலும்—வசதிகள் இருக்காது. தூரதேசச் செய்தி வரலாம். நகைத்துறை, சந்தைத்துறை, சாஸ்திரத் துறை, அரசியல் துறை, நிர்வாகத்துறை போன்ற துறையினர்கள் அதிக இலாபங்கள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்: புதன், வியாழன்.

## சிங்கம்

கொம்பியூட்டர் உலக நாடான ஜேர்மனியிலேயே சூனியம் செய்கிறார்களாம். அதைத் தடுத்துப் பாதிக்கப்பட்டவர்களைக் காப்பாற்ற அஷ்டலக்ஷ்மி வழிபாடு நல்லூரிலிருந்து போகிறதாம். நம்புவது கஷ்டமென எண்ணுகிறீர்களா? விஞ்ஞான உலகில் தெய்வசக்தி உள்ள பலர் நல்லூர் முருகன் ஆலயத்தைச் சுற்றி இருக்கிறார்கள். செல்லப்பர், யோகர் சுவாமிகள் உண்மை அறிந்த இடமல்லவா? தொழிலைக் காட்டலாம். கடவுளை காண்பவர்களால் காட்ட முடியுமா என எண்ணுகிறீர்கள். உண்மைகள் பலருக்குப் புரியாவிட்டாலும் ஓரளவு உணர உங்களால் முடியும். குடும்பத்தில் சுகக் குறைவு வரலாம். உங்கள் கருத்து, தொழில், பொருள், புதிய நடைமுறைகள் போன்றவற்றில் கண்ணாக இருந்து செயற்படுவீர்கள். உஷ்ண பீடைகள், வாய்வு அழுத்தம், ஓய்வற்ற நிலையால் உடல் களைப்பு என்பன வரலாம். சாப்பாட்டைக் கவனிக்கவும். ஓய்வு எடுக்கவும். சட்டத்துறை, மருந்துத்துறை, ஆசிரியத் துறை போன்ற துறையினர்கள் அதிக இலாபங்கள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்: புதன், வியாழன்

## கன்னி

குற்றவாளிகளைப் பிடிக்க—நல்லவர்கள் ஒருவரை, ஒருவர் புரிந்து வெளிப்படையாகக் கருத்து மாறினால்

# மகாதேவா ஜோதிடம்

நல்லது என எண்ணுகிறீர்கள். உண்மை தான். தொழில் ஸ்தானத்தில் எத்தனை தவறுகளை விடுகிறார்கள். ஊக்கமாக—நிதானமாக இருந்து செயற்பட்டு நன்மை அடைய முயலுங்கள். பானையில் இல்லாதவற்றை அகப்பையில் அள்ள முடியாதல்லவா? கோயில் குளம் எனத் தேடித் திரிவீர்கள். ஆலயங்களில் உங்களைக் காணலாம். புத்திசாலித்தனமாகச் சிரித்துப் பேசிக் காரியங்களைச் சாதிப்பீர்கள். கிருமித் தாக்கம், சளித் தொல்லை, இடுப்பு வலி, வாத நோய், கண்வருத்தம் என்பன வரும் ஹோட்டல் துறை, சந்தை வேலை, குருத்துறை, இரசாயனத் துறை போன்ற துறையினருக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், புதன், வெள்ளி.

## துலாம்

முயற்சி உள்ளவர்கள் — உண்மை அறியப் போராடுகிறவர்களால் தான் — இந்த உலகில் எதையும் சாதிக்க முடியும் உண்மையைப் பேசி நன்மையை இந்தஉலகத்திற்கு செய்வதனால் மக்களிடம் உங்களுக்கு மதிப்பும், நம்பிக்கையும் பிறக்கும் என்பது உண்மையாகும். எனவே தொழில் ஸ்தானத்தில் புதிய திட்டங்களை உருவாக்கி பலர் நன்மை அடையச் செய்வீர்கள். பல புதிய பொறுப்புக்கள் நன்மை தரும். எதிர்ப்பாலார்கள் நன்மை செய்து தருவார்கள். நியாயம் கேட்பீர்கள். பொதுத்தொண்டில் குறைகளை கேட்டு வேதனைப்படுவீர்கள். பொருள் ஈட்டும் முயற்சி வெற்றி தரும். ஆடை, நகை சிலருக்கு வரலாம். வாகன சுகம் கொடுக்கும் நரம்புச்சோர்வு, தோல் வருத்தம், தலை வருத்தம், தலையிடி, அடிக்கடி கோபம், சளி என்பன வரும். பாதுகாப்புப்பகுதி, குருத்துறை, தரகு வேலை, பிரயாணத் துறை போன்றவர்களுக்கு மாற்றங்களும் நன்மைகளும் வரும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்: - திங்கள், புதன், வியாழன்.

## விருச்சிகம்

தனக்குக் கிடைக்காததை சிலர் அழித்துவிட எத்தனிப்பது அறிவுடமையா? அல்லது ஏமாற்றத்தைத் தாங்க முடியாத ஆவேசமா? பொறுமை வேண்டும். தொழில் ஸ்தானத்தில் நிதானமாக, அளவுடன் நடந்து கொள்ளுங்கள். பக்கத்தில் இருப்பவர்கள் பல துன்பங்களைத் தரலாம். பொருள் வரவு இருக்கும். எதிர்ப்பாலாருடன் நிதானமாக இருக்கவும். தூரதேசச் செய்திகளால் பதற்ற நிலை வரலாம். ஆயினும் அதிகம் யோசிக்காதீர்கள். ஆலய வாசலில் ஏழைகளுக்கு தானதர்மம் கொடுத்து தோஷத்தை நீக்க முயலுங்கள். கிருமித்தாக்கம், உரசல் காயங்கள்,மூக்கு,தொண்டை வருத்தம், நெஞ்சுநோ என்பன கொடுக்கும். கோயில் துறை, குருத்துறை, பிரயாணத்துறை, தொழில் நுட்பத்துறை, ரீ.வி, கொம்பியூட்டர்துறை போன்ற துறையினர்கள் இலாபங்கள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- திங்கள், புதன்.

## தனுசு

பேசுகின்ற வார்த்தைகளைச் சிலர் பூசுகின்ற வீபூதிகள் போல் எண்ணுகின்றார்கள் போலும். எனவே தொழில் ஸ்தானத்தில் பேசுவதை நிதானமாகப் பேசுங்கள் கண்டதைச் சொல்லி கனபேரிடம் குறைகேட்பீர்கள். வன்சொற்களை விடுங்கள். கைகாலில் உளைவு தாக்கங்கள் வரலாம், பொருள் வரவு ஏற்படும். சகோதரங்களுக்கு நன்மைகள் கொடுக்கும். இடமாற்றம் ஏற்படலாம். நாரிநோ, குடல் வருத்தம், வயிற்று வருத்தங்கள், உஷ்ணபீடைகள் என்பன கொடுக்கும். வியாபாரத் துறை, செய்தித்துறை, ரீ வி, கொம்பியூட்டர்துறை, நிர்வாகத் துறையினர்களுக்கு மாற்றங்களும் அதிக நன்மைகளும் கொடுக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- ஞாயிறு, திங்கள், புதன்

## மகரம்

காயத்தால்ஏற்படும்வலியைவிட — கடும் சொற்களால் ஏற்பட்ட மன அழுத்த வலியைவிட — காதலால் ஏற்படும் ஏமாற்ற வலி அதிகமென்பது உண்மைக் காதலர்களுக்குத்தான் தெரியும். ஒவ்வொரு மனிதர்களுக்கும் ஏதாவது ஒரு விஷயத்தில் ஒரு வலி இருந்து கொண்டுதான் இருக்கும். எனவே நீங்கள் உங்கள் தொழில் ஸ்தானத்தில் உங்கள் மனதைச் செலுத்தியபடி இருங்கள். அதனால் இலாபங்கள் அதிகரிக்க இடமுண்டு. அரச அதிகாரிகள், அரசியல்வாதிகளிடம் இருந்து உதவிகள் கிடைக்கலாம். பணம்பெற என்னவழி என அடிக்கடி சிந்திப்பீர்கள். பெரியவர் ஒருவரின் உதவி வருங்காலத்தில் நன்மைகள் செய்யும். தோல்வருத்தம், மனக்குழப்பம், நரம்புச் சோர்வு, கைகால் தாக்கம், தலைவலி என்பன வரஇடமுண்டு. மருந்துத்துறை,ரி வி டெக், கொம்பியூட்டர், ஹொட்டல் போன்ற துறையைச் சார்ந்தவர்கள் நன்மைகள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- ஞாயிறு, திங்கள், வியாழன்.

## கும்பம்

காதல், உண்மை அன்பு, - கணவன் மனைவி உறவு ஒரு இறப்பில் மட்டுமல்ல மறு பிறப்பிலும் தொடரும் என்பது உண்மையாகும். ஏன் ஒருவரில் ஒருவர் அன்பாக இருக்க யோசிக்கின்றீர்கள்? தொழில் ஸ்தானத்தில் அன்பாகச் செயற்பட்டு நண்பர்களின் உதவிகளைப் பெறுவீர்கள். பொருள்வரவு, வெளிநாட்டுச் செய்தி, சுபமங்களச் சம்பவங்கள் என்பன ஏற்படும். இடமாற்றமொன்று மனதை அடிக்கடி வாட்டியபடி இருக்கும். பிறரின் மனம் தகுதி அறிந்து செயற்படுங்கள். மூட்டுவலி, நாரிப்பிடிப்பு, கை கால் வீக்கம் நரம்பு வருத்தம், மறதி என்பன வரும். சட்டத்துறை, ஆசிரியத்துறை, நிர்வாகத்துறை, சந்தை வியாபாரம், தரகு வியாபாரம் போன்ற துறையினர்கள் அதிக இலாபங்கள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- ஞாயிறு, திங்கள், வியாழன்.

## மீனம்

சிலரைத் திருப்திப்படுத்துவதற்காக பலர் பல இழப்புக்களை சில சமயம் அடைய வேண்டி இருக்கின்றது. இந்த அனுபவம் உங்கள் தொழில் ஸ்தானத்தில் ஏற்படும். பண வரவு ஏற்படும். குடும்பத்தினருக்கு நன்மைகள் நடக்கும். நண்பர்கள் பலர் தகுந்த உதவிகளைச் செய்து தருவார்கள். புதிய உடுப்புக்கள், நகைகள் சிலருக்கு வந்துசேர இடமுண்டு. செமியாக்குணம், இடுப்புவலி, சளி நெஞ்சுநோ, பித்தமயக்கம் என்பன கொடுக்கும். இடமாற்றம் வேண்டாம். தூரதேசச் செய்திகளால் மன ஆறுதல் வரும் மின்சாரத் துறை, அரசியல்துறை, சட்டத்துறை, நிர்வாகத்துறை, வியாபாரத்துறை, பாதுகாப்புத்துறை போன்றதுறையினர்கள் இலாபங்கள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- ஞாயிறு, திங்கள், வியாழன்.


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

***************

## உயர்திரு. தி. சோமசேகரம்

(யா/ கோப்பாய் தெற்கு, கந்தவேள் வித்தியாலய அதிபர்)

அவர்கள் அதிபர் தரம் 2 - 1 க்குப் பதவி உயர்வு பெற்றமையையிட்டு அவரை மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

நிர்வாகி,
ஆசிரியர்கள், மாணவர்கள்,
மத்திய கல்வி நிலையம்,
கரந்தன் வீதி, நீர்வேலி.

[85225]

# கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர்

திரு. க. சுந்தரேசன் அவர்களின் அன்பு மாமனார்

## க. வேலாயுதபிள்ளை

அவர்களின் மறைவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

கமநல கேந்திர உத்தியோகத்தர்கள்,
விவசாய சம்மேளனங்கள், பளை.

[85230]

உ

கல்வியங்காடு - யாழ்ப்பாணம்

அருள்மிகு

ஸ்ரீ பத்திரகாளி சமேத ஸ்ரீ வீரபத்திர சுவாமி தேவஸ்தானம்

# இலட்சார்ச்சனை விஞ்ஞாபனம்

## - 2001 -

ஆரம்பம்: 11-03-2001 (இன்று) ஞாயிற்றுக்கிழமை

பூர்த்தி: 20-03-2001 செவ்வாய்க்கிழமை

சங்காபிஷேகம், திருவூஞ்சல், திருவிளக்குப் பூசை
21-03-2001 புதன்கிழமை

பிரதம குரு: ''சிவாகம சிரோன்மணி'', ''வேதசிவாகமத் தத்துவநிதி''

பிரம்மஸ்ரீ பொ. வரதராஜக்குருக்கள் அவர்கள்

கிரியைகளில் இன்னும் பல சிவாச்சாரியார்கள் பங்கு கொள்வார்கள்.

பூசை ஆரம்பம்: காலை 7.30மணி, மாலை 3.30மணி

பத்துத் தினங்கள் சொற்பொழிவு
மாலை 5.45 மணி முதல் 6.45 மணி வரை

நிகழ்த்துபவர்:
திரு. இரா. செல்வவடிவேல் ஆசிரியர்

பொருள்: ''கம்பராமாயணம்''

- ஆலய பரிபாலன சபை, உபயகாரர்கள்.

(85271)

# அறிவித்தல்

விசேட அற்றோணித் தத்துவத்தை ரத்துச் செய்தல்

இத்தால் சகலருமறிக — சிவன் பண்ணை றோட், கொட்டடி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிவசம்பு பரமசாமி பெண் சிவபாக்கியம் ஆகிய நான், என்னை இச்செய்கைக்கு ஏவும் பல நந்நியாயங்கள் காரணமாக என்னால் 18 - 12 - 2000 ஆம் திகதி நொத்தாரிசு மாணிக்கம் தியாகராசா முகதாவில் 4050 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட விசேட அற்றோணித் தத்துவ உறுதியால் 27/7, இந்து மகளிர் கல்லூரி ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பரராஜசிங்கம் சிறிமுருகதனுக்கு 87, ஆஸ்பத்திரி வீதி, பெரிய கடை, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஆதனம் தொடர்பாக வழங்கப்பட்ட சகல அதிகாரங்களையும் தத்துவங்களையும் ரத்துச் செய்து வெற்றும் வெறிதுமாக்கி விட்டேன் என இதனால் அறிவிக்கிறேன்.

ப. சிவபாக்கியம்.

(85250)

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் முருகேசு பரமேஸ்வரன்

(முன்னாள் அதிபர், யா/ செங்குந்த இந்துக் கல்லூரி)

அவர்கள் 09—03—2001 அன்று அமரத்துவம் அடைந்ததையிட்டு ஆழ்ந்த துயரில் இருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/செங்குந்த இந்துக் கல்லூரி.

(85261)

# கண்ணீர் அஞ்சலி

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கக்கிளை 5. இன் தலைவரும் முன்னாள் இயக்குநரும், பொதுச்சபைப் பிரதிநிதியுமாகிய பன்னாலையைச் சேர்ந்த

## சுப்பிரமணியம் மாணிக்கம்

(இளைப்பாறிய ஆசிரியர்)

அவர்கள் இறைபதமடைந்ததையிட்டு ஆழ்ந்த கவலை அடைகின்றோம். இதனால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கும், சுற்றத்தவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தலைவர்,
பணிப்பாளர், பணியாளர்,
தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம்,
தெல்லிப்பழை.

(சி/15657)

# விளையாட்டு நிகழ்வு

யாழ். மாவட்ட தாச்சிச்சங்கத்தின் அனுசரணையுடன் கோண்டாவில் கிழக்கு மறுமலர்ச்சி விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்டுவரும் தாச்சிச் சுற்றுப்போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டத்தில் உரும்பிராய் வைத்தீஸ்வரா விளையாட்டுக்கழகமும் யாழ். பல்கலைக்கழக விளையாட்டுக்கழகமும் பங்குபற்றவுள்ளன. [ஐ 86]

# சரசாலையில் மிதிவெடி

யாழ்ப்பாணம், மார்ச் 11

சரசாலை வடக்கில் உள்ள வீட்டில் இருந்து பொருள்களை எடுத்துவரச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் வீட்டு வாசலில் புதைத்து வைக்கப்பட்டிருந்த மிதிவெடியில் சிக்கி இடது காலை முழங்காலுக்கு கீழ் இழந்தார்.

சரசாலை வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து அளவெட்டி வடக்கில் வசித்து வந்த சபாரத்தினம் ஜெயரத்தினம் (வயது 48) என்பவரே இடது காலை இழந்தவராவார்.

வீட்டுப் பொருள்களை எடுத்து வருவதற்காக லொறி ஒன்றுடன் சென்ற இவர் வீட்டிற்குள் சென்று பொருள்களை வெளியே எடுத்து வந்த போது வாசலில் புதைத்து வைக்கப்பட்டிருந்த மிதிவெடியில் சிக்கினார். அவருடன் கூடச் சென்றவர்கள் இவரை அழைத்து வந்து யாழ் போதனா ஆஸ்பத்திரியில் அனுமதித்துள்ளனர். (ஐ 6)

# குண்டூசி விழுங்கிய மாணவி ஆஸ்பத்திரியில்

வாய்க்குள் வைத்திருந்த மூன்று குண்டூசிகளை தவறுதலாக விழுங்கிய பாடசாலை மாணவி ஒருவர் நேற்று யாழ். போதனா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

தண்ணீர் தாங்கி வீதி, குருநகரைச் சேர்ந்த கீதபொன்கலன் ஜெனா (வயது 16) என்ற சென். ஜேம்ஸ் மகா வித்தியாலய தரம் - 11 மாணவியே குண்டூசிகளைத் தவறுதலாக விழுங்கியவராவார்.

இவர் வாய்க்குள் மூன்று குண்டூசிகளை வைத்திருந்த வேளை திடீரெனத் தும்மல் ஏற்படவே அவற்றை விழுங்கிவிட்டார் பின்னர் அவற்றில் இரு குண்டூசிகளை ஒருவாறு வெளியே எடுத்துவிட்டார். எஞ்சிய குண்டூசி தொண்டைக்குள் சென்றுவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது (ஐ-6)

# யாழ். இந்து மகளிர் கல்லூரியில் கண்காட்சி

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மகளிர் அபிவிருத்தி நிலையம் நடத்தும் ஓவியக் கண்காட்சி நேற்று யாழ். இந்துமகளிர் கல்லூரியில் ஆரம்பமாகி உள்ளது. யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கண்காட்சியைச் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

யாழ். மாவட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் நூற்றுக்கணக்கான மாணவர்களும், பொதுமக்களும் கண்காட்சியைப் பார்வையிட்டனர்.

இன்று ஞாயிற்றுக்கிழமை கண்காட்சி நடைபெறுவதுடன் பிற்பகல் மூன்று மணிக்கு மகளிர் தின நிகழ்வுகளும் பரிசில் வழங்கலும் இடம் பெறவுள்ளன.

இன்றைய நிகழ்வுக்கு மாகாண சுகாதாரப் பிரதிப் பணிப்பாளர் செல்வி உமா சிவபாதசுந்தரம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (ச-10-ரி)

உ

சிவமயம்



பருத்தித்துறை தும்பளை

நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோயில்

மண்டலாபிஷேக பூர்த்தியும்
பஞ்சகுண்டபக்ஷ நவோத்தர

# சகஸ்ர மஹா சங்காபிஷேகமும்

மெய்யடியார்களே!

நிகழும் மங்களகரமான விக்கிரம வருடம் பங்குனி மாதம் முதலாம் நாள் (14 - 03 - 2001) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் விநாயகப்பெருமானுக்கும் முருகப்பெருமானுக்கும் 108 சங்காபிஷேகமும் வீரபத்திர சுவாமி சமேத நெல்லண்டைப் பத்திரகாளி அம்பாளுக்கு 1008 சங்காபிஷேகமும் நடைபெறத் திருவருள் கைகூடி உள்ளது.

மாலை 3.00 மணிக்கு மூலஸ்தான பூஜையைத் தொடர்ந்து திருக்கல்யாணமும் திருவூஞ்சலும் நடைபெற்று அம்மன் திருவீதி உலா வருதலும் நடைபெறும். அடியவர்கள் தவறாது வருகை தந்து அம்பாளின் இஷ்டசித்திகளைப் பெற்றுய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சங்காபிஷேக பிரதமகுரு
சிவஸ்ரீ ச. மகாலிங்கசிவக்குருக்கள்
(நாயன்மார்கட்டு)

ஆலய பிரதம குருக்கள்
கிரியாசிரோன்மணி
சி. மகேந்திரநாதக்குருக்கள்

இவ்வண்ணம் சங்காபிஷேக உபயகாரர்
திரு க. யோகேந்திரநாதன்
உடையார் ஒழுங்கை,
தும்பளை, பருத்தித்துறை.

[சி/15647]

# 'சுந்தர்' வெளியீடு

தவணை 1 புலமைப் பரிசில் பயிற்சிப் பரீட்சை

★ தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் முதலாம் தவணைப் பயிற்சிப் பரீட்சை காரணமாக தரம் 5 புலமைப்பரிசில் பயிற்சிப் பரீட்சை. தனியார் கல்வி நிறுவன வெளியீடு இன்று (11-03-2001) ஞாயிற்றுக்கிழமை நிறுத்தப்பட்டு எதிர்வரும் 24-03-2001 சனிக்கிழமை நடைபெறும். 25-03-2001 பாடசாலைகளுக்கான வெளியீடு வழமைபோல் வெளிவரும்.

★ முதலாம் தவணைப் பரீட்சை வினாத்தாள்களை 26-03-2001 முதல் பிரபல புத்தகசாலைகளில் விடைகளுடன் பெற்றுக்கொள்ள முடியும். (85268)

''சுந்தர் வெளியீடு,
இல. 3, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

# கிறிஸ்தவம்

## பிரத்தியேக வகுப்புகள் ஆரம்பம்

A/L மீட்டல் வகுப்பு (புதிய பிரிவு)
ஆரம்பம் 13—03—2001 பிற்பகல் 4.00 மணி.

G. A. Q. 2001 (புதிய பிரிவு)
ஆரம்பம்: 12 - 03 - 2001 — பிற்பகல் 5.00 மணி.

B. A. PART I
ஆரம்பம்; 12 - 03 - 2001 — பிற்பகல் 4.00 மணி.

B. A. FINAL
ஆரம்பம்; 13 - 03 - 2001 — பிற்பகல் 5.00 மணி.

ஆசிரியர்:
திருமதி சுனித்தா வெனான்சியஸ்
54, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.

இதோ விற்பனையாகின்றது!

A/L கிறிஸ்தவ பாடம் எடுக்கும் மாணவர்களுக்கான
''இரட்சணிய வரலாறு''
500 M.C.Q வினா விடைத் தொகுப்பு
ஆசிரியர்: சுனித்தா வெனான்சியஸ் B.A (Hons.)

கிடைக்குமிடங்கள்:
54, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.
Beacon கல்வி நிறுவனம்,
கார்மேல் கன்னியர்மடம், கரவெட்டி.
ரஜோ வோச் வேக்ஸ், மானிப்பாய்.
(அந்தோனியார் கோயில் முன்பாக)

(85264)

# விற்பனைக்கு

புதிய HONDA CHALY விற்பனைக்குண்டு.

மூர்த்தி விளம்பர சேவை
114/19, நாவலர் வீதி-யாழ்ப்பாணம்.
தேவி அச்சக ஒழுங்கை.
Phone:2789

(85267)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 05 - 12 - 1931

மறைவு 09 - 02 - 2001

## திருமதி திலகவதி பொன்னுத்துரை

அன்புக்கும் பாசத்துக்கும் உறைவிடமாய்
எங்கள் வாழ்வில் உறுதுணையாய் விளங்கிய
எங்கள் அன்பு அம்மாவே!
கனிவுடனே பாராட்டிச் சீராட்டி வளர்த்த எம்மை
கலங்க விட்டு எங்கு சென்றீர்கள்?
யாரை இனி அம்மா என்று அழைப்போம்?

உங்கள் பிரிவால் துயருறும்
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*வேரக்கேணி கந்தசாமி கோயிலடி,*
*மட்டுவில் தெற்கு,*
*சாவகச்சேரி.*

(85262)

## மாணவருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்11

சரசாலை ஶ்ரீகணேச வித்தியாலயத்தில் கல்வி கற்று தற்போது இடம்பெயர்ந்து வடமராட்சி, வலிகாமம் பகுதி பாடசாலைகளில் தரம் 5 இல் கல்வி பயிலும் மாணவர்களை புலமைப்பரிசில் பரீட்சை விண்ணப்பத்தில் ஒப்பமிடுவதற்காக நாளை திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கும் 2 மணிக்கும் இடையில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் பெற்றோருடன் வருகை தருமாறு அதிபர் கேட்டிருக்கிறார்.

கிராம அலுவலரினால் வழங்கப்பட்டு பிரதேச செயலரினால் அத்தாட சிப்படுத்தப்பட்ட வருமான அத்தாட்சிக் கடிதங்களையும் சமர்ப்பிக்குமாறு அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

★ ★ ★

கைதடி எருதிடல் அ.த.க.பாடசாலை 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களை நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலைக்கு சமுகம் தரும்படி பாடசாலை அதிபர் வே.பாலசுப்பிரமணியம் கேட்டுள்ளார். (ஐ-133)

## மண்டபம் அமைப்பு

கொக்குவில்,மார்ச்11

உரும்பிராய் காளியம்பாள் திருக்கோயிலில் உள்வீதி தென்திசை மண்டப வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு துரிதமாக நடைபெற்று வருகின்றன. (ஐ-69)

## திருத்தம்

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இன்று காலை 9.30 மணிக்கு நடைபெறும் பட்டப்பின் டிப்ளோமா மாணவர்களின் "ஆசிரியம்" சஞ்சிகை வெளியீட்டு விழா குறித்து உதயன் 09-03-2001 ஆம் திகதி இதழின் 13 ஆம் பக்கத்தில் வெளியான விளம்பரத்தில் -

நூல் வெளியீட்டுரை நிகழ்த்துபவரின் பெயரை **கு.சண்முகநாதன்** (சிரேஷ்ட விரிவுரையாளர்) என்றும்-

சிறப்புப் பிரதி பெறுபவர்களில் ஒருவரின் பெயரை **திருமதி வில்வநாதன்** (விரிவுரையாளர்) என்றும்-

சிறப்புப் பிரதி பெறுபவர்களில் இன்னொருவரின் பெயரை **திருமதி K.சண்முகானந்தன்** (விரிவுரையாளர்) என்றும் - திருத்தி வாசிக்கவும்.

# சேவை நலன் பாராட்டு



## உயர்திரு.சின்னையா செல்வரெத்தினம்

தீவக வலயக் கல்வித் திணைக்களத்தில் ஆரம்பக் கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளராக அமர்ந்து அரும்பணிகள் ஆற்றி இன்று (11.03.2001) ஞாயிறு முதல் ஓய்வு பெறும் உயர்திரு. சின்னையா செல்வரெத்தினம் அவர்களின் சேவைகளைப் பாராட்டுகிறோம்.

**சேவை விவரம்**

| | | |
|---|---|---|
| ✡ முதல் நியமனம் <br> மாத்தளை மிற்ரக் கந்த தோட்டப் பாடசாலை. | - 11.4.1966 | - 12.3.1976 |
| ✡ ஆசிரிய பயிற்சிக் கலாசாலை | - 13.3.1976 | - 31.12.1977 |
| ✡ கண்டி கலகா தமிழ் மகா வித்தியாலயம | - 1.1.1978 | - 3.3.1980 |
| ✡ கண்டி இந்து சீனியர் வித்தியாலயம் <br> கண்டி மாவட்ட ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் | - 3.4.1980 | - 14.3.1985 |
| ✡ யாழ்.விக்கினேஸ்வரா வித்தியாலயம் <br> யாழ். மாவட்ட ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் | - 15.3.1985 | - 31.12.1992 |
| ✡ ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் <br> நல்லூர்க் கோட்டம் | - 1.1.1993 | - 31.12.1998 |
| ✡ உதவிக் கல்விப்பணிப்பாளர் <br> ஆரம்பக் கல்வி தீவக வலயக் கல்வித் திணைக்களம், வேலணை. | - 1.1.1999 | - 11.3.2001 |


உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு.சி.செல்வரெத்தினம் அவர்களும் குடும்பத்தினரும் நயினை நாகபூஷணி அம்பாளின் திருவருள் பெற்று நீண்ட காலம் நலமோடு வாழவும், சமூக, சமயப் பணிகள் ஆற்றிச் சிறந்து விளங்க வேண்டுமெனவும் பிரார்த்திக்கின்றோம்.

*தீவக வலயக் கல்வித் திணைக்களம்,*
*வேலணை.*

கல்விப் பணிப்பாளர்,
உதவிக்கல்விப் பணிப்பாளர்கள்,
கோட்டக்கல்விப் பணிப்பாளர்கள்,
ஆசிரிய ஆலோசகர்கள்,
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.

(85248)

# உள்ளத்தால் எமது வாழ்த்துக்கள்!



மார்ச் 10 இல் அகவை 50 கண்ட

## லயன் க. தேவராஜா

(வணிகத்துறைத் தலைவர், யாழ்.பல்கலைக்கழகம்)

உள்ளம் கனிந்த மனமுடையானை
உவகை கொண்டே மனதால் வாழ்த்துகிறோம்
உடுக்கை ஏந்திய கையோனே - அருள்வாய்
உலகில் அவர்களுக்கருள்வாய் சகல சௌபாக்கியமும்
என வாழ்த்தும்

*காரைக்கால்,*
*இணுவில்.*

*லயன், லயன் சீமாட்டி*
திரு.திருமதி சர்வேஸ்வரன்.

(85266)

# அகம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



மார்ச் - 10 இல் அகவை ஐம்பது கண்ட

## உயர்திரு.க.தேவராஜா

(வணிகத்துறை தலைவர் - யாழ். பல்கலைக்கழகம்)
(தலைவர் - லயன்ஸ் கழகம், இணுவில்)

**தே**டிச் சென்று நல் உதவி நல்கிடும்
**வ**ளம் நிறைந்த நல் உள்ளம் கொண்டிட்ட
**ரா**ஜா எம்தலைவர் பொன் விழாக் கண்டிங்கு
**ஜா**தி மல்லிகையாய் இன் மணம் வீசிட அரிமாவும்
இனிதே வாழ்த்துதிங்கு!

- லயன்ஸ் கழகம்,
இணுவில்.

(85265)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



## திரு.மு.செல்லத்தம்பி

(M.L.T.சமாதான நீதிவான்)

16.01.2001 அன்று யாழ்.மாவட்ட நீதிபதி ஆர்.நி.விக்னராஜா அவர்கள் முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் எடுத்துள்ளார். இவர் யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் கிளைக்குழு 12,12A யின் செயலாளராக 1997 தொடக்கம் செயலாற்றுகிறார். கூட்டுறவின் உயர்ந்த தத்துவங்களைப் பேணிப் பணியாற்றும் சமூகத் தொண்டர். மேலும் பல பொதுச் சேவைகளைச் செய்து வருகிறார். இவர் நலமுடன் சேவை செய்ய இறைவனை வேண்டுகிறோம்.

யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
கிளைக்குழு 12/12A உறுப்பினர்கள்.

(85270)

# திம்பு கோட்பாட்டின் அடிப்படையில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு

## ரெலோ தேசிய மாநாட்டில் தீர்மானம்

வவுனியா,மார்ச்11

தமிழ்மக்களின் அபிலாஷைகளை தீர்க்கும் வகையில் திம்புக் கோட்பாட்டின் அடிப்படையில் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்று ரெலோவின் தேசிய மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கட்சியின் தேசிய மாநாடு அண்மையில் வவுனியாவில் இடம்பெற்ற சமயம் இது தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அத்தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டியது அவசியமாகும். அந்தத் தீர்வு திம்புப் பிரேரணைகளின் அடிப்படையில் அமைய வேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகிறோம்.

விடுதலைப் புலிகள் அறிவித்திருக்கும் யுத்த நிறுத்தத்தை இலங்கை அரசு ஏற்று பரஸ்பர யுத்தநிறுத்தத்தை நடைமுறைக்கு கொண்டு வந்து ஒத்துழைக்க வேண்டும்.

புலிகளுடன் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் பேச்சுக்களை இலங்கை அரசு ஆரம்பிக்க வேண்டும்.

திம்புக் கோட்பாட்டை உள்ளடக்கிய வகையில் - தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைகளின் அடிப்படையில் - இனப்பிரச்சினைக்கு அரசியல தீர்வு எட்டப்பட வேண்டும் -என்றுள்ளது.

கட்சியின் முதல்வராக சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தாவும் தலைவராக செல்வம் அடைக்கலநாதனும் செயலாளர் நாயகமாக எஸ்.விநோதலிங்கமும் துணை முதல்வராக எம்.கே.அபுயூசுப்பும், துணைத் தலைவராக கே.இந்திரகுமாரும் பொருளாளராக கே.லோகேஸ்வரனும் தேசிய மாநாட்டில் தெரிவு செய்யப்பட்டனர்.

விநோ நோகராதலிங்கம், ஹென்றி மகேந்திரன், ரவிதிலகசூரிய ஆகியோர் தலைமைக்குழு உறுப்பினர்களாகவும் -

எம்.கே.சிவாஜிலிங்கம், எம். அலோசியஸ் உட்பட 21 பேர் மத்திய குழு உறுப்பினர்களாகவும் தெரிவுசெய்யப்பட்டனர். (ஐ-3)

## தமிழர்களின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தத்தால் மக்கள் படும் இன்னல்கள், அவலங்களை அவர்களிடம் எடுத்துக் கூறியுள்ள ஆயர்கள் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண எடுக்கப்படும் முயற்சிகளுக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்று அவர்களிடம் கோரிக்கை விடுத்தனர்.

தமிழர்கள் விடுத்துள்ள கோரிக்கைகளில் தாயகக் கோட்பாடு என்ற அம்சத்தை ஏற்கமுடியாது. சமாதான முயற்சிகளுக்கு சிங்கள மக்கள் எதிர்ப்புத் தெரிவிப்பதற்கு காரணம் அந்தக் கோரிக்கைதான். அந்தக் கோரிக்கையை கைவிடுவதாக அறிவித்தால சிங்கள மக்கள் சமாதான முயற்சிக்கு ஆதரவு வழங்குவர்.

தாயகக் கோட்பாடு என்பது நாட்டை துண்டாட முன்வைக்கப்பட்ட கோரிக்கை என்பதே சிங்கள மக்களின் எண்ணமாகும் என்று சோபித தேரர் தெரிவித்தார்.

தாயகக் கோட்பாடு தொடர்பாக எவரும் அஞ்சத் தேவையில்லை. ஓர் இனம் தனது கலை, கலாசாரப் பணபாடுகளைப் பாதுகாக்கவே இந்தக் கோரிக்கையை எழுப்புகின்றது. இந்தக் கோரிக்கை தொடர்பாக எதிர்காலத்தில் இடம்பெறும் பேச்சுக்களின போது ஆராயலாம். எனவே தற்போது பேச்சுக்களை ஆரம்பிக்க சிங்கள மக்கள் ஆதரவு வழங்கவேண்டும் என்று ஆயர்கள் கேட்டுக்கொண்டனர்.

சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக கிறிஸ்தவ குருமார்கள் ஆர்வம் காட்டும் அதே நேரத்தில் இந்துக் குருமார்களோ, இந்து அமைப்புக்களோ ஆர்வம் காட்டுவதில்லையே அதற்குக் காரணம் என்ன என்று சோபித தேரர் ஆயர்களிடம் கேள்வி எழுப்பியதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## பாரிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடு பெரும் பொருளாதார நெருக்கடி ஒன்றுக்கு முகம்கொடுக்க வேண்டி ஏற்படும். எனவே இவ்வாண்டு முடிவதற்குள் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர வேண்டும் பேச்சுக்களை ஆரம்பித்து தீர்வுக்கு வழி காணவேண்டும் - இப்படி பீரிஸ் ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் மூலம் அறியவந்தது. (ஐ-3)

## மாணவர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களில் இருக்குமாறு கோரப்படுவதாகவும் பெற்றோர்களும் இதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

தமிழ் ஆசிரியர் சமூகத்துக்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஆற்றிய சேவைகளையும், தமிழ் மாணவரின் கல்வி வளர்ச்சிக்காக சங்கம் மேற்கொண்ட பணிகளையும் சாதனைகளையும் அவர் செய்தியாளர்களுக்கு விளக்கினார்.

நாளைய மாநாட்டில் அதிபர்கள், ஆசிரியர்களுடன் சங்கத்தின் பிரதிநிதிகள், உறுப்பினர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஆசிரியர்கள் நாளை பாடசாலைக்குச் சென்று கையொப்பமிடத் தேவையில்லை; மாநாட்டுக்குச் செல்வதை கடிதம் மூலம் அறிவித்து விட்டு கலந்து கொள்ளுமாறு மகாசிவம் கேட்டுள்ளார்.

கடந்த 10 ஆண்டுகளின் பின்னர் ஆசிரியர் எழுச்சி மாநாடு இங்கு நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

நேற்றைய செய்தியாளர் மாநாட்டில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம், சிரேஷ்ட துணைப் பொதுச செயலாளர் த.பஞ்சலிங்கம், கல்வி, கலை, கலாசாரச் செயலாளர் செ.பாலசிங்கம், யாழ்.இணைச் செயலாளர் ந.நகுலநாதன், யாழ்.கிளையின் பொருளாளர் ந.சிவராசா ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-10)

## புலிகளுக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செல்லும் ஜனாதிபதி அங்கு முக்கிய பேச்சுக்களை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

விடுதலைப் புலிகள் நேர்மையாகப் பேச்சுக்களில் பங்கு கொள்வதை உறுதி செய்யும் வகையில்-

அந்த அமைப்பின் மீது சர்வதேச நெருக்குதல்களை மேற்கு நாடுகள் மூலம் கொடுப்பதற்கு ஜனாதிபதி இந்த விஜயத்தை பயன்படுத்துவார் என் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்சமயம் பாகிஸ்தானில் தங்கியுள்ள வெளி விவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அங்கிருந்து ஜேர்மனி சென்று ஜனாதிபதியின் ஐரோப்பிய நாடுகள் விஜயத்தில் இணைந்து கொள்வார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3-6-20)

## பேச்சுக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தகவல் வெளியிட்டன. நோர்வேயின் விசேட தூதர் எரிக் சொல்ஹெய்ம் மற்றும் நோர்வே அரசுப் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ள அமைச்சர் பீரிஸ், முதற் கட்ட பேச்சுக்கான கால அட்டவணை, பேச்சு நடத்தப்படும இடம் ஆகியன தொடர்பாக முக்கிய தீர்மானங்களை எடுப்பார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை -

ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் செய்யவுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நோர்வே சென்று அமைச்சர் பீரிஸுடன் இணைந்து நோர்வே அரசுப் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்துவார் என்றும் ஒரு தகவல் கிடைத்துள்ளது. (ஐ-3)

## ஆயுதக் கொள்வனவு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

கல்கிசையில் இயங்கும் 'மகா ஜன நிறுவனம்' என்னும் போலி நிறுவனத்தின் பற்றுச்சீட்டுக்கள் இணைக்கப்பட்ட "வவுச்சர்கள்" சமர்ப்பிக்கப் பட்டே நிதி பெறப்பட்டுள்ளது.

ஆனால் குறித்த முகவரியில் அத்தகைய நிறுவனம் இல்லை என்றும் அங்கு ஓர் உணவுச்சாலை மட்டுமே இயங்குவதாகவும் தெரியவந்துள்ளது.

இந்த மோசடி தொடர்பாக மேலும் சில படையினர் கைது செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


அலகு ரீதியான விஞ்ஞானப் பரீட்சைகள்

தரம் 11(O/L) மின்னோட்டம் - 18-03-2001 - 9 மணி (மு.நே)
மின்னின் விளைவுகள்-19-03-2001 - 4 மணி(பி.நே)
தரம் 10 வரைபுகள் - 18-03-2001 - 9 மணி (மு.நே)
சக்தியும் வேலையும் -19-03-2001- 4.மணி(பி.நே)

பரீட்சைகள் நடைபெறும் இடங்கள்:

றேடியண்ற் - அரியாலை ✪ நாவலர் - ஆனைப்பந்தி
✪ சைன் - உடுவில் ✪ கலைமதி - ஊரெழு
PERSONAL CENTRE - யாழ்நகர்.

(85067)

தலைநகரில் கற்பித்த தரம் வாய்ந்த ஆசிரியர்

விஞ்ஞானம் -GRAPHS குமரன்

✪ வெளி மாணவர்களும் பரீட்சை எடுக்கலாம்.
✪ அதிகூடிய புள்ளி எடுக்கும் மூவரின்பெயர் உதயனில் வெளியாகும்.



வீடுகள் விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி, ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள சகல வசதிகளும் கொண்ட வீடுகள் விற்பனைக்குண்டு.

விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தரகர்களுக்கு கொமிஷன் கொடுக்கப்படும்.

விளம்பர இல:-1230.
மே/பா.உதயன்.

(சி/15565)



விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள 16X10 BEXTER கல்லுடைக்கும் கிறசர் விற்பனைக்குண்டு.

கிறசர் தற்போது உள்ள ஏத்தூர் இடத்திலும் வைத்து நடத்தலாம்.

10 HP ENGLISH 3PASS மோட்டார் ஒன்றும் விற்பனைக்குண்டு.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
A.சிவபாதம் அல்லது இரகுநாதன்
அப்பையாவீடு,
இருபாலைச்சந்தி,
கோப்பாய்.

(85083)



கணக்கீடு

A/L 2001 / DAY

வருமானச் செலவு கணக்கு

ஆரம்பம்: இன்று 11 மணி

விரைவில்

கம்பனி

S.தவா
B.Com(Hons) (Acc.Spl)

வாணி கல்வி நிலையம்
சுன்னாகம்

(85275)



பாடசாலைகளில் கணனிக் கல்வி..? அலுவலகங்களில் கணனிப் பாவனை ?
போதிய கணனிச் செயன்முறையின்மை..? இவற்றிற்குத் தீர்வு..?
உங்களிடமே ஒரு கணனி சொந்தமாக இருந்தால் !!!..

விசேட இலகு தவணைக்கட்டணத்திட்டத்தின் மூலம்




நியாய விலையில் உயர்தர கணனிகள் வாங்க

IBMS IT Market

intel நிறுவனத்தின் Latest வெளியீடான Pentium III 866 MHz, Pentium II 633 MHz Cyrix நிறுவனத்தின் Cyrix 333MHz கணனிகளையும் அத்துடன் Laser,Dotmatrix,ColorPrinters, Scanners, Cartridges, inkjet Refills, Ribbons, Floppy Diskettes, RAM உட்பட அனைத்து உதிரிப்பாகங்களிற்கும்

IBMS IT Market
No 701 K.K.S Road, Jaffna.
T.P.021-3165
Email- ibmsjaffna@yahoo.com


## துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரி முன்னாள் அதிபர்

முருகேசு பரமேஸ்வரன்

அவர்களின் திடீர் மறைவினால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அன்னாரின் பாதக் கமலத்தில்
எமது கண்ணீர்ப் பூக்களைக்
காணிக்கையாக்குவதுடன் அன்னாரது
ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

விக்னேஸ்வரா களஞ்சியம்,
விநாயகர் அரைக்கும் ஆலை,
நல்லூர் மார்கெட், கல்வியங்காடு.

(85277)

## மரண அறிவித்தல்

### நாகர் நாகமுத்து

தெல்லிப்பழை கிழக்கு கிளானையைப்பிறப்பிடமாகவும் தெல்லிப்பழை மகாத்தனையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகர் நாகமுத்து நேற்று (10.03.2001) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நா.மாதனின் அன்புச் சகோதரனும், சின்னப்பிள்ளையின் அன்புக் கணவரும் தவமணி, நவரட்ணம், நாகேந்திரன், தேவி, மனோ ஆகியோரின் அன்புத் தகப்பனும் கந்தசாமி(M.P.C.S), செல்வராசா(சதோசா), ஞானகுணசேகரம்(M.P.C.S), தவஜோகராணி, ஈஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும் பாமினி, ஜெகதரன், ஜெயசுதன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(11.03.2001) அவரது வீட்டில் நண்பகல் 12 மணிக்கு இடம் பெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நாகேந்திரன்
(மகன்)

(C/15659)


324, Palaly Rd., Jaffna.
e-Commerce
Free Seminar
Date:-11.03.2001(Sun) Time:- 10.00 a.m
(C/15658)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11. 03. 2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.